அக்ஷயா
மாத நாவல்
ரூ.4/-



# மயக்கும் மலர்விழி..!

அகிலா கோவிந்த்

# மயக்கும் மலர்விழி...



எதனால் இப்படி அவனை நிராகரிக்கிறோம் என அவளுக்கே புரியவில்லை!

ஒரு வேளை அவன் வழிவதினாலா?

"பார்த்த முதல் சந்திப்பிலே, யப்பா..." மயக்கும் மலர்விழி உனக்கு... ! என்றானே...?



## அகிலா கோவிந்த்



அதை அவள் வாணி கொஞ்சமும் ரஸிக்கவில்லை.

மகிழ்வதற்கு மாறாகவே பொருள் கொண்டாள். அவள் என்ன சாகஸ முயற்சிக்காரியா? பெரிய மன்மதனாய் தன்னை நினைத்துக் கொண்டிருக்கும் இவனை.... மயக்கி.... வஞ்சிக்க... கண்களில் இப்படி மைதீட்டி வந்து நின்றாளா?

என்ன... அபத்தமான கற்பனை... என அவள் அருவையாய் முகம் வெட்டியதைக் கூட.... அவன், 'அட.. இதுவும் ஒரு அழகுதான்...!' என்றான். சட்டென கன்னத்துப் பக்கம் பளிரிடும் குறுஞ்சிரிப்பாம்.. வசிகரமாவ... கன்னக்குழியாம்..! பார்த்து கொண்டே இருக்கலாமாம்.... !

"பார்த்து.. பார்த்து அந்தக் குழியில் விழுந்து நீ... நீங்கள்... நீங்கள்... கையைக் காலை உடைத்துக் கொள்ளாதீர்கள்... சார்..!"

என எரிச்சலாய் பேச ஆரம்பித்தவள், மறுகணமே வெட்டிப் பேச்சு எதற்கு? என்பதுபோல் பேச்சை நிறுத்தி விறுவிறுவென அகன்றாள்.

அவன் உதயசந்திரன் நடுக்கவில்லை.

அவள் விருட்டென கண்ணாடிக் கதவுகளைத் திறந்து தன்ரூமை விட்டுச் செல்வதை குளிர்வாகவே பார்த்தான். ரஸித்தான்.

முதுகு துளைக்கும் அவனது பார்வையை உணர்ந்த அவளுக்குத்தான் பயங்கர எரிச்சல்....!

மேனஜராய்... லட்சணாய் இல்லாமல் வந்த ஸ்டாஃப்பிடம் இப்படி வழிந்து கொண்டு....

இதில் இப்டபடியொரு மன்மத பார்வை வேறு? தேவையா இவனுக்கு?

நேற்று இப்படித்தான் அவள் முக்கியமான ஃபைல் ஒன்றில் கையெழுத்து வாங்குவதற்காக அவசரமாக அவனுடைய ரூமில் நுழைந்து நீட்டினாள்.

அவனோ நிதானமாக அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, "மிஸ் வாணி, சங்க இலக்கியமான வளையாபதியில் ஒரு பாட்டு உண்டு. அதில் பெண்களை, 'வண்டொடு தேனினம் ஆர்ப்பப் புனித்திடைப் பூத்த பூங்கொடி ஒப்ப...' என ஓர் வர்ணனை உண்டு. அதாவது, பெண் எப்படியென்றால் வெல்லியலார் நம்மிடம் மயங்கி நெருக்கமாய் வந்து ஆரவாரித்து மொய்க்கும்படி அழகாக மலர்ந்து சோலையில் நிற்கும் பூங்கொடியைப் போன்றவர் பெண்கள்.... என்கிறது. அப்படித்தான் ஒரு அபார அழகுடன் நீ விளங்குகிறாய்...." என தன் வழிசலை அவன் ஆரம்பித்ததும் ஒரு முறைப்புப்

பார்வையுடன் தன் வேலையில் மட்டும் கவனம் செலுத்தி, கையெழுத்து வாங்கிவிட்டு மறுநிமிடமே அங்கிருந்து மறைந்தாள் அவள்.

தன் இருக்கையில் அமர்ந்தபடி நீளமான மூச்சிழுப்புடன் எல்லாவற்றையும நினைத்துப் பார்த்தவளுக்கு உதயசந்திரன் செய்யும் ரோமியோத் தொல்லை புதிதாய் வியக்கும்படி இருந்தது.

அவள் வேலை பார்க்கும் பன்னாட்டு ஏற்றுமதி நிறுவனத்தின் இந்தக் கிளைக்கு புது மேனஜராய் மாற்றலாகி வந்தவன் இந்த உதயசந்திரன். வந்த ஒரே வாரத்தில் அவளைக் காணாததைக் கண்டது போல் பார்க்க ஆரம்பித்து விட்டான். "என்னடா... இது வம்பு?" என அவள் திகைப்பதற்குள் மேலும் மேலும் அவளிடம் பேசும் சந்தர்ப்பத்தை உருவாக்கி ஏறக்குறைய காதல் வசனம் என்ற பெயரில் வழிய ஆரம்பித்து விட்டான்.

தன்னைவிட உயர் அதிகாரி, பொறுப்பான பதவியில் இருப்பவன் இவனிடம் முகத்திலடித்தாற்போல் சொல்வது கடினமே.. என அவள் பொறுத்துப் போனாள்.

ஆனாலும் சில சமயம் எரிச்சலுற்று, "ஏன்.... ஸார்..." இந்த அலுவலகத்தில் எத்தனை பெண்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் விட்டு விட்டு என்னை ஏன் துரத்துகிறீர்கள்? என கேட்டும் பார்த்து விட்டாள்.

அதற்கும், நிறைய பூக்கள் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் ரோஜா இதழ்தானே என்னை கவர்ந்து சுண்டிக் இழுக்கிறது? அது போல்தான் நீயும், நீதான் என்னைக் கவர்ந்தவள், உன்னைத்தான் எனக்குப் பிடித்திருக்கிறது.... என்றான் அவன் சிலேடையாய்.

வாணி இப்படிக் கேட்டதற்கு காரணமும் உண்டு. அலுவலகத்தில் அவள் காதுபடவே சக அலுவலகப் பெண்கள் உதயசந்திரனின் அழகை, அவனது கம்பீர பர்ஸனாலிட்டியை கிசுகிசுவென வியந்து புகழ்வதைக் கண்டிருக்கிறாள்.

உதயசந்திரனின் அந்த நெடுநெடு உயரமும், திடகாத்திர உடம்பும், சுருள் முடிதவழும் பரந்த நெற்றியும், கூர்மையான கண்கள் துளைக்க பளிரிடும் அந்த முத்துப் புன்னகையும் வசீகரமான அந்த முகமும் எந்த இளம் பெண்களையும் சுண்டிபபாக வசீகரிக்க கூடியதுதான்.

அதிலும் உதயசந்திரன் பொருளாதார விஷயத்திலும் உயர்ந்தவன். பரம்பரை பணக்காரன் கார், பங்களா என சொகுசு வாழ்க்கையோடு, பெயருக்கு, பொழுது போக்கிற்கு வேலை பார்ப்பது போல் இக்கம்பெனியில் சேர்ந்து வேலை பார்ப்பவன் என அவள் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதான் என உணரும் போது திகைக்கத்தான் செய்தாள்.



அவனது பளபளப்பான காரையும் அதை லாவகமாய் ஒருவித ஸ்டைலுடன் அவன் தினம் ஓட்டிச் செல்லும் அழகையும் அவளே வியந்து பார்த்ததுண்டு.

அப்படி வியந்து பார்த்தவளுக்கு அவன் தன்னிடம் வந்து காதல் வசனம் பேசி வழிவது கண்டு வியப்பு அதிர்ச்சியாய் அதிசயமாய் ஆகிக்கொண்டது.

ஆனாலும் உள்ளூர இப்படி ஆளுமையும் கம்பீரமும் கொண்ட பர்ஸனாலிட்டியான ஒருவன் தனக்காக உருகுவதை தன் அன்பிற்காக அலைவதை அவள் ரசிக்கத்தான் செய்தாள்.

அவன் அப்படித் தன்னை விழுங்காத குறையாய் பார்ப்பதை சில சமயம் எரிச்சலாக உணர்ந்தாலும் பலசமயங்களில் அதை ரஸிக்கவே செய்தாள்.

வாணியின் இந்த விசித்திரமான விருப்பு வெறுப்பு கலந்த செய்கைக்கு பெரிதாய் ஒரு காரணமும் இருந்தது. அந்த காரணத்தினாலே அவள் தன்னை பற்றியோ, தனக்கு ஒரு வாழ்க்கை அமைவது பற்றியோ என்றுமே யோசித்துப் பார்த்ததில்லை. அதற்காக கவலைப்பட்டதும் இல்லை!

அதற்கு முக்கிய காரணம் அவளது மகிழ்வான குடும்பச்சூழ்நிலை. இனிமையும் அன்புமாய் அண்ணன் சுரேஷனின் கரம் பிடித்து வந்த பாசக்கார அண்ணி மாலினி!

மாலினி காட்டிய அபரித அன்பு, நெகிழ வைக்கும் பாசம் என ஒவ்வொரு அன்பிலும் திளைத்தவள் அப்படியே மாலினியை நினைத்து உருகித்தான் போனாள்.

அதனாலே அவளை அண்ணியாய் எண்ணாமல் உடன் பிறந்த சகோதரியாகவே பாவித்தாள். அலுவலக வேலை முடிந்து வந்ததும் நேராக மாலினியைத் தேடிச் சென்று அவளைக் கட்டிக் கொள்ளாத குறையாய் அமர்ந்து, அன்று நடந்த விஷயங்களை அவளிடம் கதையளக்க ஆரம்பித்து விடுவாள்.

மாலினியும் அவளை ஒரு அன்புச் சகோதரி போலவே மடியில் சாய்த்து அவள் தலைக்கேசத்தை வாஞ்சையாய் நீவி விடுவாள். கை விரல்களை இதமாகப் பிடித்து விடுவாள். நெற்றியில் தோன்றும் அவளது ஒற்றைத் தலைவலிக்கு மருந்திட்டு இதமாகத் தடவி விடுவாள்.

எப்போதும் வீடு திரும்பும் அவளை சூடான காபியுடன் வரவேற்கும் மாலினி வாணி உற்சாக மூடில் இருந்தால், "வா.. ஷாப்பிங் போவோம்..." என கிளம்பி விடுவாள்.



# 2

நேற்றுகூட இப்படித்தான்

வீட்டைவிட்டு கிளம்பும்போது மாலினி அடித்தட்த கூத்தை இப்போது நினைத்தாலும் அவளுக்க சிரிப்புதான் வருகிறது. உள்ளிருந்து ஆவலாய் ஓடி வந்த அண்ணி மாலினி, ஒரு நிமிடம் "வாணிக் கண்ணு... என அவள் தோள்களைப் பற்றி உரிமையுடன் திருப்பி, இரு... இந்த ஐ லைனரை வைத்து உன் புருவங்களை இன்னும் கொஞ்சம் டச் பண்ணி விடுகிறேன்.. அப்படியே அந்த கண் இமைகளுக்கும் ஒரு இழுப்பு, அப்புறம் உன் பார்வை அப்படியே மைவிழிப்பார்வையாகி விடும். சும்மாவே ஜொலிக்கும் உன் அழகு, அந்த அபார பார்வை வீச்சு வந்ததும் தகதகக்க ஆரம்பித்து விடும். என் மைத்துனி இப்படி அழகு ரதியாய் இருக்க வேண்டும் என நான் ஆசைப்படுவது தவறா... நீயே சொல்லு....?" என்றபடி நிஜமாகேவே மாலினி அவள் முக அழகை டச் செய்ய ஆரம்பிக்க சிணுங்கத்தான் செய்தாள் வாணி.

"ஐயோ... அண்ணி, நான் ஒன்றும் காலேஜ் செல்லும் குமரி இல்லை." பொறுப்பாய் ஒரு அலுவலக வேலைக்குச் சென்று கொண்டிருப்பவள். இந்த ஒப்பனை, இந்த அழகு எனக்குப் போதுமே! என்றாலும் விடமாட்டாள் அண்ணி.

"அட... வேலைக்குச் செல்பவள்... என்றால் இளக்காரம் ஒன்றும் இல்லையே.... ! சொல்லப் போனால்.. இப்படித்தான் அழகு தேவதை போல் பளிச்சென இருக்கவேண்டும். அப்பபோதுதானே அலுவலகத்திற்கு வருகிற நாலு பேருக்கு. இங்கு ஒரு ராஜகுமாரி உட்கார்ந்து வேலை பார்க்கிறாள் என்ற அதிசயமான விஷயமும் தெரிய வரும்." என்ன நான் சொல்வது சரிதானே? என தனது நீளமுகத்தை மேலும் கீழும் ஆட்டியபடி சீரியஸாக அண்ணி பேசும்போது வாணிக்கு வியப்பை அடக்க சிரமமாகவே இருக்கும்.

இப்படி ஒரு அண்ணி இருப்பாளா.. இல்லை... கிடைக்கத்தான் செய்வாளா? அன்பை, பாசத்தை மைத்துனி மேல் டன் டன்னாகக் கொட்டிக் கொண்டு... திரைப் படங்களில், நாடகங்களில் சொல்வது போல் அடிக்கடி வாணியை தனது செயல்களால் புல்லரிக்கத்தான் செய்து விடுவாள்!

ஆரம்பத்தில் அண்ணன் சுகேசனுக்கு தாயார் பெண் பார்க்க ஆரம்பித்தபோது முதலில் பயந்தவள் வாணிதான். மணப்பெண்ணாய் வரப் போகிறவள் எப்படியோ.... என்ன குணமோ? தன்னிடம் எப்படி நடந்து



கொள்வாள்? அதை விட நம் சிடுமூஞ்சி அண்ணனின் சுபாவத்தை சகித்துக் கொள்வாளா? என்றெல்லாம் பெரும் கவலை ஓடிற்று.

தாயார் கற்பகம்தான் அவள் பயத்தைப் போக்கும் விதமாய், நீ ஒன்றும் கவலைப்படாதே கண்மணி. எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்றதும் அடடா தாயாரை மறந்து விட்டோம்.. வரப்போகிறவள் முக்கியமாய் நோய்களால் உடல் தளர்ந்து மெலிந்திருக்கும் தன் தாயாரை கவனித்துக் கொள்ள வேண்டுமே? தாயாரிடம் அன்பாய் நடந்து பணிவிடைகளை செய்ய வேண்டுமே? முகம் சுழிக்காமல் செய்வாளா?

வாணி உள்ளூர பயந்தாலும் தாயாருடன் சென்று மாலினியை பெண் பார்க்கும்போது அவள் புன்னகை முகம் கண்டு பயம் நீங்கினாள்.

மாலினி மாநிறத்துடன் சுமாரான அழகுடன் விளங்கினாலும் அடிக்கடி அவள் சிரிக்கும் பாங்கு, அந்த புன்னகை சுபாவம் வாணியை வெகுவாய் கவர்ந்தது.

அப்போது அவளுக்கு ஒரு புத்தகத்தில் படித்த விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. அடிக்கடி சிரிப்பவர்கள் இயல்பாகவே புன்னகை புரியும் வழக்கம் கொண்டிருப்பவர்கள்... நிச்சயம் அதிகம் கோபப்படாதவர்களாய்த்தான் இருப்பார்கள் என்று அந்த புத்தகம் கணிப்புத் தெரிவித்திருந்தது.

அதனாலே அந்த ஒரே காரணத்திற்காவே சம்மதம் சொன்னவள் அண்ணனிடமும், நல்ல... புன்னகை முகம். நீ தைரியமாகக் கட்டலாம்... என மாலினிக்காக ஸ்பெஷல் சிபாரிசும் செய்தாள்

அவள் நினைத்தபடியே மாலினியை சுகேசனுக்கும் பிடித்துப் போக அடுத்த மாதமே கல்யாணமும் நடந்தேறியது.

மாலினியும் மாட்டுப் பெண்ணாய் குடி புகுந்துவிட்டாள். வாணி, சுகேசன் அன்புத் தாயார் கற்பகம் என சிறு குடும்பமாய் ஆயிரத்து ஐநூறு ரூபாய் ஓட்டு வீட்டில் வாழும் நடுத்தர வாழ்க்கை அவர்களது.

சிறு வயதிலேயே தந்தையை இழந்து தாயின் அரவணைப்பிலே வளர்ந்தவர்கள்தான் வாணியும் சுகேசனும். கற்பகம்தான் ஓடியாடி நாலு வீடுகளில் வேலை பார்த்து, பத்துப் பாத்திரம் தேய்த்து கஷ்டத்துடன் கஷ்டமாய் அவர்களைப் படிக்க வைத்தாள்.

ஒருவாறு இருவரும் டிகிரி படிப்பு வந்ததும் முதலில் படிப்பை முடித்த சுகேசன் தீவிரமாய் வேலை தேடி ஐயாயிரம் ரூபாய் சம்பளத்தில் ஷிப்பிங் கம்பெனி ஒன்றில் சேர்ந்து விட்டான். அடுத்து படிப்பை முடித்த வாணியும் ஒரு மென்பொருள் கம்பெனியில் நல்ல சம்பளத்தில் வேலை தேடிக் கொண்டாள்.

இருவரும் சம்பாதிக்க ஆரம்பித்ததும் முதல் வேலையாய் கற்பகத்தை வீட்டில் உட்கார வைத்து ஓய்வெடுக்க வைத்தனர். காலங் காலமாய் தங்களுக்காக உழைத்து ஓடாய் தேய்ந்து விட்ட தாயின் மெலிந்த உருவத்தைக் கண்டு உள்ளத்தில் கண் கலங்க உருகினார்.

மருத்துவரிடம் காட்டியபோது தினம் உட்கொள் வேண்டிய மருந்து, மாத்திரைகள் என ஒரு பெரிய லிஸ்ட்டையே நீட்டினார் அவர். இருவரும் வேலைக்கு வேறு போவதால் தாயாரை மற்ற நேரங்களில் கவனிக்கவாவது ஒரு நல்ல பெண் துணை வேண்டுமென நினைத்து வாணிதான் சுகேசனை கல்யாணத்திற்கு வற்புறுத்தினாள்.

சுகேசனுக்கு இயல்பிலிருந்தே சிடுமூஞ்சி சுபாவமும் முன்கோபமும் ஜாஸ்தி. சிரிக்க காசு கேட்பவன் போலத்தான் எப்போதும் முகத்தை உர்ரென வைத்துக் கொண்டு இருப்பான். அதனாலேயே வாணி சிறு வயதில் அடிக்கடி, "அண்ணனை இப்போது சிரிக்க வைக்கிறேன் பார் என் அம்மாவிடம் பத்து ரூபாய் பெட் கட்டி கூட விளையாட்டு விளையாடுவது உண்டு".

அந்த விளையாட்டில் கூட, விளையாட்டுக்காக கூட சிரிக்க மாட்டான் சுகேசன்.

"போ... நீ! உனக்கு வேறு வேலை இல்லை...? என எரிந்துதான் விழுவான்."

வாணிக்கும் அவனது அந்த சிடுசிடுத்தனம் பழகிப்போய் விட்டதால் எரிச்சல் படுவதற்குப் பதில் அதைக் கண்டு ரசிக்கவே செய்தாள்.

அதனாலே அடிக்கடி சிரிக்கும் புன்னகை முகமான மாலினியைப் பார்த்ததும், "இவள்தான் உனக்கு சரியான பொருத்தம்... என குரல் உயர்த்தி சுகேசனை சம்மதிக்கச் செய்து கட்டியும் வைத்தாள்."

அவள் நினைப்பு கொஞ்சமும் வீண் போகவில்லை. மாலினி புன்னகை முகம் மட்டும் காட்டவில்லை. அன்பைப் பொழியும் அன்புச் சுரங்கமாக ஏறக்குறைய மாறியிருந்தாள்.

கணவன் சுகேசனை, தாயார் கற்பகத்தை, வாணியை என எல்லோரையும், விழுந்து விழுந்து கவனித்தாள். அதிலும் வாணியிடம் ஒரு படி மேலே போய் அவளுக்க உடன் பிறவா சகோதரியாகவே ஆகிவிட்டாள்.

அவளுடன் சிரிக்கச் சிரிக்கப் பேசுவதும், சீண்டி விளையாடுவதும், கூட்டிக் கொண்டு ஊர் சுற்றுவதும் அவளை உட்கார வைத்து அழகுபடுத்துவதும் ரசிப்பதுமாய் நல்ல தோழி போலவும் ஆகிவிட்டாள்.

"அம்மா கற்பகத்துக்கே ஒரே ஆச்சரியம்தான்! கண்ணு நீ நினைச்ச மாதிரியே அன்பான மருமக வந்திருக்கா. சுகேசனையும் நல்லா கவனிச்சுக்கிறா. என்னையும் நல்லா பார்த்துக்கிறா. நாம கொடுத்து வைச்சிருக்கோம்! என நிஜமாகவே சொல்லிச் சொல்லி புளகாங்கிதம் அடைந்தாள்."



ஆனால் சுகேசன்தான் மாறவில்லை. அப்படியேதான் இருந்தான். கல்யாணத்திற்கு முன் இருந்த அதே சிடுசிடுத்தனம் கொஞ்சமும் மாறவில்லை. 'அல்லலி மாலினி சிரிக்கச் சிரிக்க பேசினாலும் அவன் தன் சுபாவத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

வாணி அதற்குத்தான் ரொம்பவும் கவலைப்பட்டாள். இப்படிக் கலகலப்பான ஒருத்தி மனைவியாய் வந்தும் தன் சுபாவத்தை கொஞ்சமும் மாற்றிக் கொள்ளாமல் இருக்கிறானே? என வருந்தினாள். கூடவே அவனது சிடு சிடு சுபாவத்தை மாலினி உணர்ந்து அவள் அவன் மீது வெறுப்பு கொண்டு விடக்கூடாதே என்ற பயமும் ஏற்பட்டது.

"ஆனால் மாலினி வந்த ஒரே வாரத்திலேயே சொல்லி விட்டாள். அவர் உன் அண்ணன் சிறு வயதில் இருந்தே இப்படித்தானாமே....?' அதிகம் பேச மாட்டாராம். கொஞ்சம் கோபக்காரராம்... என்று சொல்லவும் வாணி பதறித்தான் அவளைப் பார்த்தாள்..

"இதெல்லாம் யார் சொன்னார்கள்? என்றாள் அதே பதட்டத்துடன்."

"மாலினியோ புன்னகைத்தபடி, வேறு யார்? உன் அண்ணன்தான் சொன்னார். அது, அப்படி இருப்பது அவர் சுபாவமாம். நான் பழகிக் கொள்ள வேண்டுமாம்.... என்றவள் அதே புன்னகையை பெரிதாக்கியபடி, சரி... நானும் பழகிக் கொள்கிறேன்... என்று சொல்லி விட்டேன். சரிதானே வாணி? என நகைச்சுவையை ரசிப்பது போல் சிரித்தாள்."

வாணியும், நல்லவேளை இவள் அண்ணனைப் புரிந்து கொண்டாள். அப்படியே ஏற்றுக் கொண்டாள் எனவும் நிம்மதியடைந்தாள்.

அதனாலே அவளுக்கு மாலினி மீது அந்த அன்பொன்று ஏற்பட்டு அளவற்ற பிரியமாய் வளர்ந்தது. மாலை அலுவலகம் முடிந்து வருகையில் அல்லலிக்கென எதாவது உணவுப் பதார்த்தங்கள், பொட்டு, ஜிமிக்கி என ஜிகினா அயிட்டங்கள் வாங்கி வந்து ஆர்வமாய் கொடுப்பாள்.

"ஆனால் மாலினியோ, அட... என்னை நீ கவனிப்பது இருக்கட்டும். உன்னை நான் எப்படி கவனிக்கிறேன்... பார்... என வரிந்து கட்டிக் கொண்டு அவளை அன்பில் உபசரிப்பில் திணறடிப்பாள்."

மாலை களைத்து திரும்புவளுக்கு ரெடியாய் அவளுக்குப் பிடித்தமான பாதாம் அல்வாவை செய்து கொடுத்து அசத்துவாள். அண்ணன் செலவுக்காக அவளுக்கு கொடுக்கும் பணத்தை மிச்சம் பிடித்து அழகான சேலை ஒன்றை வாணிக்கு எடுத்து பரிசளிப்பாள்.

வாணி வானம் வரை குதிக்காத குறையாய் புளகாங்கிதம் தான் அடைவாள். அவளுக்கும் மாலினி மீது இனம் புரியாத அபரிதமான அன்பொன்று எழுந்து அவளை திக்கு முக்காடத்தான் வைக்கும்!



# 3

வாணிக்கு நாளுக்கு நாள் ஆச்சரியம்தான். மாலினி ஒவ்வொரு நாளும் அன்பையும், பாசத்தையும் வாணியின் மேல் கூட்டிக்கொண்டே இருந்தாள்.

"இப்படித்தான் ஒரு நாள் வாணியை அழைத்துக் கொண்டு ஷாப்பிங் என்ற பெயரில் ஊர் சுற்றியவள் அந்த பளிங்கு கட்டிடத்தின் முன் நின்று அதன் முகப்பு போர்டைக் காட்டினாள், வெஸ்டர்ன் அண்ட் கிளாஸிக் டான்ஸ் என எழுதப்பட்டிருக்க வாணி விழிக்கத்தான் செய்தாள்.

"என்ன பார்க்கிறாய்...? உனக்கு வெஸ்டர்ன் பிடிக்குமா.... இல்லை பரதம் பிடிக்குமா? என்றாள்."

"எதற்கு அண்ணி கேட்கிறீர்கள்?' என வாணி வியந்த போது உரிமையுடன் தோளைத் தட்டிய மாலினி, வேறெதற்கு? நீ கற்றுக் கொள்வதற்குத்தான். உனக்கு ஆசை இல்லையா? என்றாள்.

"ஆசை உண்டு. ஆனால்...."

"வாணி இழுக்க... மறுபடியும் செல்லமாய் தட்டினாள்."

"பின்.... என்ன?'

கல்லூரி நாட்களில் படிக்க ரொம்ப ஆசை இருந்தது. அப்போதெல்லாம் விட்டு விட்டு இப்போது வேலை பார்க்கும் நேரத்தில் போய்... எனத் தயங்கியவளை மிரட்டலாகவே அடக்கினாள் மாலினி. "அட.. என்ன இது பேச்சு? சொல்லப் போனால் உன் அழகு இப்போதுதான் கூடி மின்னலாய் ஜொலிக்கிறது. இப்போது நீ படிப்பது தான் சரி. எதில் உனக்கு இன்ட்ரஸ்ட்? ஆர்வம்? பரதம். பரத நாட்டியத்தில் தானே....?' என கேட்கவும் வாணியின் தலை ஒரே விழா குறையாய் பலமாய் ஆடியது.

ஏற்கவவே இந்த பரத நாட்டியத்தின் மேல் அவளுக்கு ஒரு கிறுக்கு உண்டு. உடன் படித்த சக கல்லூரி மாணவிகள் பரதம் கற்று முதல் முதல் மேடை அரங்கேறும் நிகழ்ச்சிக்கு அவளை அழைக்கும்போது அதைப் பார்க்க பரவசமாய்த்தான் கலந்து கொள்வாள். நாமும் இது போன்று செய்ய வாய்ப்பு எப்போதுதான் அமையுமோ? என ஏங்கத்தான் செய்வாள். இனிமையான இசையுடன் ஜதிகள் ஒலிக்க பரதப் பெண்மணிகள் அபிநயம் பிடித்து ஆடும் அழகில் அப்படியே ஒரு கணம் மெய்மறந்துதான் போவாள் அவள்.

"அப்படிப்பட்டவளிடம் இப்படி ஒரு கேள்வி கேட்டால் தலை கிறுகிறுக்காமல் பின் என்ன செய்யும்?'

முத்துப் பற்கள் அத்தனையையும் காட்டிக் கொண்டு மாலினியை நோக்கி வெட்கமாய் இளிக்கத்தான் செய்தாள் அவள்.



"அது போதாதாமாலிக்கு...? விடுவிடுவென அவளைக் கூட்டிக் கொண்டு அந்த இசைப் பள்ளிக்குள் நுழைந்து விட்டாள்."

உள்ளே ரிசப்ஷனில் வரவேற்பு பெண்மணி ஒருத்தி தெரிய அவளிடம் பரதநாட்டியம் பயிலுவதற்கான விபரங்களை விசாரிக்க ஆரம்பித்து விட்டாள். தினம் மாலை ஆறு மணி முதல் ஏழு மணி வரை, ஐந்து மணிக்கு அலுவலக வேலை முடிந்து திரும்பும் வாணி கலந்து கொள்ள சரியான டயம் என பயிலுவதற்கான நேரம் கூட பிக்ஸ் செய்தாயிற்று.

இன்னும் இரண்டொரு நாளில் தேவையான பணத்தை கட்டி சேர்ந்து விடுவதாக உறுதியும் கூறி விட்டாள் மாலினி. "வாணிக்குத்தான் நம்ப முடியாத ஆச்சரியம்! வெளியே அவளை தரதரவென இழுத்துக் கொண்டு வந்தவள் பிலுபிலுவென பிடித்தாள்."

என்ன அண்ணி இது....? யாரிடமும் கேட்காமல் நீங்கள் உறுதி கூறிவிட்டீர்கள்? இதெல்லாம் சாத்தியப்படுமா... நடக்கிற காரியமா? என்றாள்.

ஏன்... நடக்காது... வாணி? கண்டிப்பாக நடக்கும்... என்று அழுத்தந்திருத்தமாய் சொன்ன மாலினி அவள் முகத்தை நன்கு உற்றுப் பார்த்தாள். உனக்குப் பரதம் பயில நிஜமான ஆசை ஆர்வம் இருக்கிறதுதானே? என்றாள்.

மை விழிகள் தரை தாழ குனிந்த வாணி தலையை வேகமாய் அசைந்து சம்மதத்தைச் சொன்னதும் அவள் தலையில் செல்லமாய் குட்டத்தான் செய்தாள் மாலினி.

இவ்வளவு ஆசையை மனதில் வைத்துக் கொண்டு எதற்காக மறைக்க வேண்டும்? யாருக்காக பயப்படுகிறாய்? என்றாள் பொய்க் கோபத்துடன்.

எல்லாம் அண்ணனை நினைத்துதான். அவருக்கு இது சுத்தமாய் பிடிக்காது... என உண்மையைக் கொட்டினாள் வாணி.

தனது நீள புருவத்தை உயர்த்தி அசூயையாய் உதட்டைச் சுழித்தாள் மாலினி. அவருக்கு எதுதான் பிடிக்கும்? எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன்! என்றாள் அவள் தைரியத்துடன்.

"வாணி நினைத்தது போல் வீட்டல் விஷயத்தைச் சொன்னதும் பிரளயம்தான் உண்டாயிற்று. அண்ணன் சுகேசன் வானத்துக்கும் பூமிக்குமாய்த்தான் குதித்தான்."

"வேலை பார்க்கும் வயதில் அடுத்து கல்யாணத்திற்கு வரன் பார்க்க வேண்டும். அதை விட்டு விட்டுப் பரத நாட்டியம் கற்றுக் கொள்ளப் போகிறாயா? இதெல்லாம் உனக்குத் தேவையா? இதோ பார் வாணி வீணாக இவளது பேச்சையெல்லாம் கேட்டு உனது மனதை குழப்பிக்கொள்ளாதே. நீயாக யோசித்து முடிவெடு...!' என்றான் கர்ஜிக்காத குறையாய்.

"வாணி மலங்க விழித்து அண்ணியை பயப்பார்வை பார்க்க மாலினி சைகையாலே தைரியமாகப் பேசு..." என்பது போல் உத்தரவே இட்டாள்.

"அது.... இது... இல்லை...அண்ணா... எனக்கும் ஆசை உண்டு. பரத நாட்டியம் கற்றுக் கொள்ள வேண்டும். என்பது எனது நீண்ட நாள் கனவு. அதான்... அதனால் தான்...."

திக்கித் திணறினாலும் துணிச்சலாய் பேசினாள் வாணி. அதற்கு ஒரு சபாஷ்... போடுவது போல் கைகளாலே சியர்ஸ் காட்டி மறுபடி ஊக்குவித்தாள் மாலினி.

"கூடவே தன் பங்குக்கு, இதோ பாருங்கள்... ஒரு விஷயத்தை நன்றாக யோசியுங்கள். என்ன இருந்தாலும் நம் வாணி இன்னும் ஓரிரு வருடத்தில் கல்யாணமாகி யார் வீட்டுக்கோ மாட்டுப் பெண்ணாய் செல்லப் போகிறவள். அங்கு எப்படி எப்படி அமைகிறதோ... இங்கு... பிறந்தகத்திலாவது சந்தோஷமாய் தன் ஆசைகளை நிறைவேற்றி கொள்ளட்டுமே.. ஏன் தடை போடுகிறீர்கள்? என்றாள் குரலை உயர்த்திக் கொண்டு."

இரண்டு பெண்களும் பிலுபிலுவென பிடித்ததாலோ என்னவோ சுகேசன் வேறு வழியில்லாதவனாய் சம்மதிக்க வேண்டியதாயிற்று. சரி... எப்படியோ போங்கள்! என தலையாட்டியவன் கூடவே சிந்தனை வந்தவனாய், ஆமாம். தினம் தனியாகவா போகப் போகிறாய்? என்றதும் மாலினி உதட்டுச் சுழிப்புடன் முன் வந்து, அது எப்படி? நான் எதற்கு இருக்கிறேன்? தினமும் வால் போல் அவளை கூட்டிச் சென்று விட்டு திரும்ப அழைத்து வருவது என் பொறுப்பு! என்றாள்.

"அவளை நன்றாக முறைத்த சுகேசன், நீ... சரியான வால்தான். முதலில் உன் வாலை நன்றாக ஒட்ட நறுக்க வேண்டும். அப்போதுதான் சரியாக வருவாய்... என்றபடி அதே கோபப் பார்வையில் அகன்றான் அவன்."

"ஆயிற்று. மாலினி திட்டமிட்டவாறே சம்மதம் வாங்கி இரண்டே நாளில் வாணியை பரத நாட்டிய கிளாஸில் சேர்த்து விட்டு விட்டாள். தாய் கற்பகமும் முதலில் தயங்கியவள் வாணியின் ஆர்வத்தைக் கண்டு சம்மதித்து விட்டாள்."

முதல் நாள் பயிற்சிக்கு அவளைக் கூட்டிக் கொண்டு குதி போடாத குறையாய் மாலினி கிளம்பியது கண்டு வாணிக்கே ஒரே ஆச்சரியம்! படிக்கப் போவது நாம், நம்மை பயில வைப்பதில் அண்ணிக்கு இவ்வளவு ஆர்வமா? தனக்குள் எழுந்த கேள்வியை அடக்க முடியாமல் கேட்டே விட்டாள்.

அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக கைகளால் அவள் முகத்தை ஆசையுடன் வருடி அழகாய் நெட்டி முறித்தாள் மாலினி. பின் இருக்காதா எனக்கு? சிறு வயது முதலே பரதம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது என் நீங்காத ஆசை. ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த என்னால அதை நினைத்துப் பார்த்து கனவு கொள்ள முடிந்ததே தவிர.... நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. அதான் அதனால்தான் இப்போது சந்தர்ப்பம் வரும்போது எனது அந்த ஆசைகளை என் அன்பான, ப்ரியத்துக்குரிய மைத்துனி மூலம் நிறைவேற்றிக் கொள்கிறேன். சரிதானே? என்றபோது அண்ணியின் பாசத்தைக்



கண்டு ஒரு கணம் மெய்சிலிர்த்தவளாய் அவளை அப்படியே இறுகக் கட்டிக் கொண்டாள் வாணி.

"ஒரு வழியாய் மணியைப் பார்த்துக் கொண்டே இருவரும் அரக்கப் பரக்க டான்ஸ் ஸ்கூலை நோக்கி நடந்தார்கள். டான்ஸ் ஸ்கூல் கட்டிடத்தை நெருங்கும்போது ஜீன்ஸூம் டாப்புமாய், டீ ஷர்ட் மிடியுமாய், குட்டைப் பாவாடை ஸ்கர்ட் என பலவித நாகரீக உடைகளில் கல்லூரி யுவதிகள் பளிச்சிட்டுக் கொண்டிருப்பது கண்டு வாணியே ஒரு கணம் மிரளத்தான் செய்தாள்."

அவளது எண்ணத்தை புரிந்து கொண்ட மாலினி அவள் தோள்களைத் தட்டியவள், ஒன்றும் மிரளத் தேவையில்லை வாணி. இவர்களெல்லாம் வெஸ்டர்ன் டான்ஸ் பயில வந்தவர்கள் நீ நமது பாரம்பரிய கலையான பரதம் பயில வந்திருக்கிறாய். பெரும் நாட்டியப் பேரொளியாய் பெரும் விருதுகள் பெற்று மிளிரப் போகிறாய். எனக்கு அதில் கொஞ்சமும் சந்தேகம் இல்லை என குளிர்ச்சியான ஐஸூம் வைக்க வாணியின் அழகான தலை சந்தோஷத்தில் கிடுகிடுவென ஆடத்தான் செய்தது.

"கட்டிடத்தினுள் நுழைந்து ரிசப்ஷனில் பணத்தைக் கட்டி பெயரை பதிவு செய்து பயிலும் அரங்கின் நுழைந்த வாணிக்கு மற்றொரு எண்ணம் கவலையாய் வாட்டிற்று. தான் பயிலும் நேரம் வரை அண்ணி வெட்டியாய் ரிசப்ஷனில் உட்கார்ந்து வாய் பார்த்துக் கொண்டு பொழுதை கழிக்க வேண்டுமே? தினம் தினம் இப்படி உட்காருவது ஒரு தண்டனை போல் ஆகி விடுமே! என மருக அவள் நினைப்பை புரிந்த மாலினி கைகளை அழுத்தி தைரியம் கொடுத்தாள் அட இதற்குப் போய் யோசிக்கிறாயா? என்னை விடு. நான் பாட்டுக்கு பராக்கு பார்த்துக் கொண்டே நேரத்தைப் போக்கி விடுவேன். நீ சென்று வா! என்று உதடுகளை விரித்து பெரும் புன்னகையுடன் அவளுக்கு விடை கொடுத்தாள்."



## 4

டான்ஸ் ஸ்கூலில் முதல் இரண்டு நாட்கள் சுவாரஸ்யமாய்ச் சென்றது. நடுத்தர வயதுப் பெண்மணி ஒருவர் அன்பாய் அழகாய் நாட்டியத்தின் ஒவ்வொரு பகுதியையும் விளக்கி சொல்லிக் கொடுத்தது அவளை மிகவும் கவர்ந்தது. தன் கால்கள் இது போன்று மின்னலாய் ஆடி ஒத்துழைக்குமோ என பயந்தவளுக்கு மனம் லயித்ததும் எல்லாமே இலகுவாய்த்தான் தோன்றியது.

அதனாலே பயிற்சி முடிந்து வீடு வந்தாலும் யாருக்கும் தெரியாமல் இரவுகளில் தனிமையில் மொட்டை மாடிக்குச் சென்று கற்றுக் கொடுத்த ஸ்டெப்களை ஆடியும் பார்த்தாள். அப்படிக் கற்றுக்கொள்வதும் ஆடுவதுமே அவளுக்கு மிகப் பரவசமாக இருந்தது.

மூன்று நாட்கள் எவ்வித பிரச்சினையுமில்லாமல் சென்ற நடன வகுப்பில் நான்காம் நாள் பிரச்சினை உதயசந்திரன் ரூபத்தில் வந்தது. வழக்கம் போல் அன்றும் மாலினி அண்ணியை ரிசப்ஷனில் உட்கார வைத்து விட்டுப் பயிலும் அரங்கத்தில் நுழைந்தவள் அங்கு நடனம் பயில புதியதாய் வந்திருந்தவனைக் கண்டு அரண்டுதான் போனாள்.

காலில் சலங்கைகளை கட்டிக்கொண்டு நடன ஆசிரியை முன் நின்று கொண்டிருந்தது சாட்சாத் உதயசந்திரனேதான்.

"தனது உயர் அதிகாரியாய் இருப்பவன் தனக்காக இப்படி வந்திருக்கிறானா? என்ன கூத்து இது! அவனை அங்கு அந்த சூழ்நிலையில் பார்த்த வாணிக்கு திக்கென்றுதான் இருந்தது."

"இவன் எதற்கு வந்தான்?"

விழிகள் விரித்து அவள் வியப்பாய் அவனைப் பார்க்க... அவள் வருவதைக் கண்டு விட்டு முகத்தைத் திருப்பினான். அவளை நோக்கி குறுநகை படரும் கள்ளச் சிரிப்பொன்றை உதிர்த்தான்.

"அந்த சிரிப்பு ஒன்றே வாணிக்கு எல்லாவற்றையும் உணர்த்திற்று. உண்மையில் இவன் நடனம் பயில வரவில்லை. அவளுக்காக.... சினிமாக் கதாநாயகர்கள் போல் ஜொள் மன்னனாய் இங்கு வந்திருக்கிறான். என்ன செய்வது இவனை? ஒரு பொறுப்பான கம்பெனி மேனேஜர் பதவியில் இருப்பவன் இப்படி இருப்பானா?"

அவள் நிைத்தவாறு மெல்ல அன்ன நடை போட்டுத்தான் அவர்கள் பக்கம் போனாள்.

"நடன ஆசிரியை, இவர் உதயசந்திரன். புதிதாக பயில வந்திருக்கிறார்.... என அறிமுகப்படுத்தியபோது அவளை முன்பின் தெரியாது போல்தான் பவ்யமாய் கை கூப்பிச் சிரித்தான் அவன்."

எரிச்சலாய் உணர்ந்தவள் நடன ஆசிரியை அகன்றதும், எதற்காக இங்கு வந்தீர்கள்? என்றாள் கோபமாய்.

"அசால்டாய் தோள்களைக் குலுக்கியபடி அசட்டுப் புன்னகையுடன் சிரித்தான் அவன்."

"வேறென்ன? நடனம் கற்றுக் கொள்ளத்தான்...!"

"உங்களைப் பார்த்தால் கற்றக் கொள்ள வந்ததுபோல் தெரியவில்லையே...?"



"அமது உனக்கு மட்டும் புரிந்தால் சரி... என அவன் வெட்கமில்லாமல் சொன்னதும் கண்களை உருட்டிப் பெரிதாய் முறைத்தாள்."

உங்கள் ஆசை ஒரு போதும் நிறைவேறாது... அவள் வார்த்தைகளை முடிக்கும் முன் அவன் அவசரமாய் குறுக்கிட்டுக் கண்டிப்பாய் நிறைவேறும்.. என இடைமறித்து அவள் சினத்தை அதிகப்படுத்தியது.

"என்ன உளறுகிறீர்கள்?"

"உளறவில்லை கண்மணி. நான் இங்கு வருவது கம்பர் வர்ணித்த அற்புதமான காட்சியான அண்ணலும் நோக்கினான். அவளும் நோக்கினாள். காட்சிக்காகத்தான். அந்த உன் பெரிய மை விழிகளை விரித்து அழகான பார்வை ஒன்று பார்க்கிறாயே... அது போதும் எனக்கு. அந்த அபார விழி வீச்சை ரசிக்கத்தான் இங்கு தினம் வருகிறேன்... அதற்காக நடனமும் பயிலுகிறேன்."

"அவன் பாட்டுக்கு சிரிப்புடன் சொல்லிக் கொண்டு போக முகம் சிவக்கும் கோபத்துடன் விருட்டென அங்கிருந்து அகன்றாள் அவள்."

"தான் பயிலும் பகுதிக்குச் சென்றவள் தான் உண்டு தன் வேலை உண்டு என்பது போல் தன் கவனம் முழுவதையும் பயிலுவதிலேயே செலுத்தினாள். அவன், அவள் பகுதிக்கு அடிக்கடி தேவையில்லாமல் வருவதையும், கண்களை உருட்டி உருட்டி வைத்த கண் மாறாமல் அவளையே பார்ப்பதையும் உணர்ந்தாலும் கொஞ்சமும் கவனியாதவள் போல் நடமாடினாள்."

மேலும் இரண்டு மூன்று நாட்களில் அது பழகிப் போய் சிரமமில்லாத ஒன்றாகவே அவளுக்குத் தோன்றியது ஏனெனில் அலுவலகத்தில் இப்படித்தான் அவன் முன் இயந்திர கதியாய் நடமாடிப் பழக்கம் அவளுக்கு. அதை அப்படியே டான்ஸ் ஸ்கூலில் கடைப்பிடிப்பது பெரிய விஷயமில்லாமல் போயிற்று.

"ஆயினும் மேனேஜர் போன்ற பொறுப்பான பதவியில் இருப்பவன் இப்படியாகவா அசடு வழிய ஜொள் மன்னனாய் திரிவான் என்ற ஆச்சர்யமும் அவளுக்கு! அதே நேரத்தில் உதயசந்திரனை ஒரேயடியாய் விடலைத் தனமாய் திரியும் ரோமியோ போலும் நினைத்து விட அவள் மனம் மறுதலித்துதான் நிற்கும்.

"அந்த நெடுவான உயரம், சுருளான முடி தவழும் பரந்த நெற்றி முறுக்கு மீசை, ஆழமாய் ஊடுருவும் கருவிழிகள். இறுக்கமில்லாமல் சிரிக்கும் வசீகரப் புன்னகை. ஆஜானுபாகுவான உடம்புடன் கம்பீரமான ஆண்மை பொங்க நிற்கும் அவன் அழகு."

மற்றவளிடம் தெளிவாய் பேசி கண்டிப்புடன் நடந்து கொள்கிறவன் அவளிடம் மட்டும் மயக்கமாய் ஒருவித கிறக்கத்துடன் நடந்து கொள்கிறான்!

ஒரு கணம் அவன், தன்னையே காணாததைக் கண்டது போல், தனக்காக அப்படி விழுந்தடித்து சுற்றி வருவது அவளுக்குப் பரவசமாகவும் இருந்தது.

அவன் பார்வையில் படாமல் டான்ஸ் கிளாஸில் ஒளிந்து நடமாடிய தன்னை... அவன் காண முடியாமல் தவித்தது... சுற்றிச் சுற்றி ஒவ்வொரு பகுதிகளிலும் போய் தன்னைத் தேடியது... ஏமாற்றத்துடன் கைகளை குத்திக் கொண்டு தவித்தபடி சோகமாய் நின்றது.. என அவனது கோலத்தை அவன் கவனியா வண்ணம் பார்த்துவிட்டு வீட்டிற்கு வந்து விழுந்து விழுந்து சிரிப்பாள் அவள்.

தனக்காக இப்படி வெறி பிடித்தாற் போல் ஒருவன் அலைகிறானே என்ற ஆச்சரியமும் அவளுள் ஏற்படும். ஆனால் உதயசந்திரன் விஷயத்தில் அவளால் உடனடியாக எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற ரீதியில் முடிவெடுக்க முடியவில்லை. அவனது விஷயத்தில் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியிருந்தது. அதற்கு சரியான காரணமும் இருந்தது அவளுக்கு.



## 5

"அலுவலகத்தில் மற்ற ஊழியர்கள் முன் அடக்கமாக நடந்து கொள்கிறவன் டான்ஸ் ஸ்கூலில் கொஞ்சம கூடுதலாக அசடு வழிய நடந்து கொள்வது சில சமயம் எரிச்சலையே தந்தாலும் இந்த உதயசந்திரன் ஒரு குறிப்பிட்ட வரம்பை மீறி இடைஞ்சல் கொடுக்க மாட்டான் என்ற நினைப்பில் பொறுத்துக் கொண்டாள்."

அதனாலே அண்ணி மாலினியிடம் கூட இந்த விஷயததைக் கூறாமல் தவிர்த்து விட்டாள்.

"ஆனாலும் சில சமயம் அவன் அப்படி காணாததைக் கண்டதுபோல் டான்ஸ்ஸ்கூலில் தன்னைத் தேடி சுற்றிச் சுற்றி வந்தது ஒருவித அச்சத்தை ஏற்படுத்த அந்த எண்ணத்திற்கு வந்தாள்."

"அன்று விழிகள் உருட்டிப் பார்த்துக் கொண்டிருந்தவனை ஒரு நிமிடம் வருகிறீர்களா? என்றபடி டான்ஸ் ஸ்கூலின் இன்னொரு பகுதிக்கு அழைத்துச் சென்றாள்."

தனியறையில் நின்று கொண்டு கேள்விகளால் அவனை விளாசியதுபோது அசராமல் பதில் சொன்னான் அவன்.

"நீங்கள்... என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்...?"

"ம்ம்.. ஒன்றும் நினைக்கவில்லை.."



"ஒரு பொறுப்பான கம்பெனியின் மேனேஜர் செய்கிற காரியமா இது?"

"ஓய்க், இங்கு நான் உன் கம்பெனி மேனேஜர் இல்லை. உன்னைப் போல் நடனம் பயிலும் ஒரு சக மாணவி ஸாரி...மாணவன்....."

"நீங்கள் நடனம் பயிலும் லட்சணம்தான் தெரிகிறதே...."

"அவள் கிண்டல் குரலுக்குச் சிரித்தான். உனக்கு தெரிகிறது... தெரிகிறது அல்லவா...? அது.... போதும்... அது போதும்... மேலும் மேலும் அவன் சிரித்தபோது கைகளை உயர்த்தி எரிச்சலாய் நிறுத்தினாள்."

"மிஸ்டர் உதயசந்திரன்... ஒரு பெண்ணை இப்படி ரோமியோ போல் விடலைத் தனமாய் சுற்றி வருவது உங்களுக்கு வெட்கமாய் தெரியவில்லை..?"

"தெரியவில்லை.. என்றான் சுருக்கமாக."

"தெரியவில்லை என்றால்... என்ன அர்த்தம்?"

"அவனும் கைகளை உயர்த்தினான்."

"இதோ பார் வாணி, நான் உன் பின்னால் சுற்றுவது வாஸ்தவம்தான். ஆனால் நான் என்ன செய்கிறேன் என்று கவனித்தாயா?"

"என்ன செய்கிறீர்கள்? என்றாள் அவள் கோபம் குறையாதவளாய் புருவம் உயர்த்தி."

"அவள் சினமாய் கேட்டதற்கு ஒரு கணம் பதில் சொல்லாமல் அவள் பக்கத்தில் வந்து ஊடுருவுவது போல் அவள் கண்களை நன்கு உற்றுப் பார்த்தான் உதயசந்திரன்."

"இதோ... இதோ.. தெரிகிறதே.. இந்த மைவிழிக் கண்கள்... இதன் அபார அற்புத ஒளிவீச்சு... இதை... இந்த அழகை ரசிக்கத்தான் தினம் தினம் ஓடோடி வருகிறேன். ஆசை தீர பார்த்து பழகுகிறேன். நான் செய்வது வெறும் பார்வை. பார்வை மட்டுமே... இதில் உனக்கு... என்னம்மா சங்கடம் வந்து விட்டது?"

"கெட்டிக்காரத்தனமாய் எதையோ ஆரம்பித்து எப்படியோ அவன் முடித்ததில் அவள் கோபம் மூச்சு வாங்கியது. பேசாமல் அந்தக் கண்களைப் பிடுங்கி உங்கள் கையில் கொடுத்து விடட்டுமா? என கேட்க நினைத்து வாயை அடக்கியவள், அவனைப் போலவே பேசினாள். ஆனால், ஒருவர் அனுமதியில்லாமல் ஒருவரை பார்வையால் பார்ப்பதும் தவறுதானே? என்றாள்."

"தவறுதான், வேண்டுமானால் முறைப்படி உன்னிடம் அனுமதி கேட்கிறேன். இன்னும் ஒரு ஆறு மாத காலத்திற்கு இந்த விழிகளால் அந்த மை விழிகளை ஆசை தீர பார்த்து பழக அனுமதி கொடு. கொடுக்கிறாயா...? என்றான்."

குப்பென முகம் சிவந்து போனவள் திரும்பி அதே ஆத்திரத்துடன் முறைத்தாள்.

அப்போதும் விம்மிக் கோபப்படும் அவள் ஆச்சரியமான அழகை ஆசை தீர ரசித்துக் கொண்டிருந்தான் அவன் உதயசந்திரன்.

"அன்று ஒரு நாள் முழுவதும் அதற்கென ஒதுக்கி அவள் யோசித்தும் பார்த்தாள். என்னதான் உதயசந்திரனின் ஆளுமை அந்த கம்பீர பர்ஸனாலிட்டி அவளை ஈர்த்திருந்தாலும் மனது தன்னை மீறி அவன் மேல் ஒரு லயிப்பு காட்டினாலும் ஒரு விஷயம் அவளுக்கு முக்கியமாக இடித்தது."

"சரி... அவன் நினைப்பது போலவே அந்த உதயசந்திரனை விரும்ப ஆரம்பித்தால், அல்லது அவன் விருப்பத்தை ஏற்றுக் கொண்டால் என்ன நடக்கும்? உடனே பெரியவர்களின் பேச்சு வார்த்தை தான். நாள் குறிக்கப்பட்டு கல்யாணமும் நடந்து விடும்."

பின் அவள் சூட்கேஸ் பெட்டியைத் தூக்கிக் கொண்டு உதயசந்திரனின் மனைவியாய் புகுந்த வீடு சென்று விட வேண்டியததான். அங்கு பிரும்மாண்டமான பங்களா, விசாலமான அறைகள், ஏ.ஸி.கார் என ஒரு சொகுசான வாழ்க்கையே அவளுக்கு காத்திருக்கும். அவளும் ஒரே நாளில் மேல் தட்டு பகட்டான பணக்காரத்தனத்திற்கு வந்து விடுவாள்.

"ஆனால்... ஆனால்... அவளுக்கு அதில கொஞ்சமும் இஷ்டமில்லையே...! அவளுக்கு எல்லாவற்றையும் விட அன்பான அம்மா, அண்ணன், பிரியமான அண்ணி, அமைதியான அவளது பழைய கால ஓட்டு வீடு, அதன் மாடியில் அவளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் சிறிய அறை அதுதானே பிடித்திருக்கிறது. அந்த சிறிய அறையின் ஓரமாய் கிடக்கும். அந்த பழைய மரக் கட்டிலில் உட்கார்ந்து ஒரு கணம் கண்ணை மூடினால் உலகையே மறந்து விடுவாளே!"

"வேலை முடிந்து வரும் தினங்களில் அப்படியே வந்து சேலையைக் கூட மாற்றாமல் அந்தக் கட்டிலில் கவிழப் படுத்து மணிக்கணக்காய் கண்களை மூடிக் கொண்டு கிடப்பது அவளுக்க எவ்வளவு பெரிய சுக அனுபவமாய் இருக்கும்?"

"அதே போல் இரவு நேரங்களில் தனிமையாய் அந்தச் சிறிய பிலிப்ஸ் டிரான்சிஸ்டரில் பழைய பாட்டுக்க்ளை கேட்டபடி எவ்வளவு நேரம் சிலையாய் மெய் மறந்து கிடந்திருக்கிறாள்?"

"அது மட்டுமா... கீழே இறங்கி வந்தால் அம்மாவில் இருந்து அண்ணி வரை அவளை அன்பாய் தாங்கும் பாங்கு? சூடச் சூட காபியா... இல்லை அவளுக்குப் பிடித்த பால் பாஸந்தியா? அண்ணி மணமணக்க அவள் முன் டம்ளரில் நீட்டும் போது பரவசமாய்த்தான் இருக்கும்."



அம்மா மட்டும் சும்மா இருப்பாளா? அவளை ஆசையாய் தன் மடியில் படுக்க வைத்து, வேலை பார்த்து களைத்திருப்பாய். கொஞ்சம் தூங்கு கண்ணு... என வாஞ்சையுடன் தனது நடுங்கும் கை விரல்களால் அவள் தலையைக் கோதி விட்டு அதில் பெரும் நிம்மதியை அடையும் போது அவளுக்கு சொர்க்கத்தில் மிதப்பது போல் தான் இருக்கும்.

என்னதான் அண்ணன் வீட்டில் அடிக்கடி சிடுசிடுத்தாலும் அவள் மேல் மட்டும் அந்த கடுகடுப்பை காட்டமாட்டான். வழக்கம் போல் சம்பளம் வாங்கிய கையோடு அவளுக்கு ஒரு சேலை எடுத்து வருவதை கல்யாணம் ஆகி அண்ணி வந்த பிறகும் அவன் நிறுத்தவில்லை.

"அவள் முன் சேலையை நீட்டி, உனக்குப் பிடித்திருக்கிறதா பார்? என கேட்கும்போது வாணி நெளியத்தான் செய்வாள்."

"இன்னும் எனக்கெதற்கு அண்ணா?" அண்ணிக்கு எடுத்துக் கொடுங்கள் என்று சொல்லும்போது பிடிவாதமாய் அவள் கையில் திணித்து "அவளுக்குத் தேவையில்லை. இது உனக்குத்தான்!" என்றபடி சென்று விடுவான்.

பின்னால் கதவோரமாய் நின்று கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கும் அண்ணியைக் கண்டு ஒரு கணம்.. "என்ன செய்ய... என்ன சொல்ல..." என தவிக்கத்தான் செய்வாள் வாணி.

முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் அன்று முழுதும் நடமாடும் அண்ணியைக் கண்டு உள்ளூர அவளுக்கு பயமாகவும் இருக்கும். ஆனால் மறுநாள் அதே நேரத்தில், அதே அண்ணன் முன், அவர் ஒரு சேலை உனக்கு எடுத்துக் கொடுத்தால் நான் சும்மா இருந்து விடுவேனா? "இந்தா .... பிடி... என் சார்பில் உனக்கு இரண்டு சேலைகள்...! என தனது சேமிப்பு பணத்திலிருந்து அண்ணி சர்ப்பரைஸாக வாங்கி வந்து சேலைகளை நீட்டும்போது அவள் இன்பமாய் அதிர்ந்துதான் போவாள்."

அட.... கணவன் தனக்கு எடுத்துக்கொடுக்காமல் தங்கைக்குக் கொண்டு வந்து நீட்டுகிறானே... என்று பார்த்தால்.... அதையெல்லாம் உதறிவிட்டு ஒருபடி மேலே போய் இரண்டு சேலைகளை அல்லவா நீட்டுகிறாள்...? என்ன ஒரு பாசம்...? என்ன.... ஒரு அன்பு...? தொண்டை விக்கித்துப் போனவள் போல் அப்படியே பேச வார்த்தைகளின்றி அண்ணியை இறுகக் கட்டிக் கொண்டு ஆனந்தக் கண்ணீரில் மிதப்பாள் அவள்.

இது போன்று மென்மையா இதமான அனுபவங்கள் அவளுக்கு விட்டில் அடிக்கடி ஏற்பட அப்போதே அவள் மனதுள் தீர்மானித்து விட்டாள். எந்த சூழ்நிலையிலும் எதற்காகவும் இந்த வீட்டை விட்டும் இவர்களது அன்பை விட்டும் பிரியக்கூடாது. பிரியவே கூடாது என்று!

அப்போதே அந்தக் கேள்வி பூதாகாரமாய் எழுந்து அவளை வாட்டவும் செய்தது. என்ன இருந்தாலும் அவள் ஒரு பெண். நாளைக்கு கல்யாணம்

என்ற ஒன்று நடந்து புகுந்த வீடு செல்ல வேண்டுமே... அப்போது என்ன செய்யப் போகிறாள்?

எழுந்த கேள்விக்கு அவளுள்ளே பதிலும் தேடிக்கொண்டாள். அமைதியான சுபாவம் கொண்ட ஒருவனை வீட்டோடு மாப்பிள்ளை போல் பேசி வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் போதுமே? அந்தப் பிரச்சினையைக் கூட சரி செய்து விடலாமே? அன்பான வீட்டை பாசமான சூழ்நிலையை பிரிய வேண்டிய அவசியம் இராதா?

அப்படி ஒரு மனக் கணக்கு போட்டு தன்னுள் தெளிவாகத்தான் இருந்தாள் வாணி. ஆனால் இப்போது உதயசந்திரன் காதல் என்கிற பெயரில் சலனம் ஏற்படுத்துவதுதான் அவளுள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது.

உதயச்திரனின் காதல் விரட்டல் ஆரம்பித்ததுமே முதலில் அவனை தனது அந்த மனக்கணக்கு வட்டத்தில் பொருத்தத்தின்தான் பார்த்தாள். முதலிலே ஒரு பாயிண்ட் இடித்தது. உதயசந்திரன் ஒன்றும் அமைதியான ஆமாம் சாமி டைப் இல்லை. எப்போதும் எதற்கும் தன் கருத்தை தெளிவாய் எடுத்து உரைக்கிறவன். சரி அந்தப் பாயிண்டை கூட அப்படியே ஏற்றுக் கொண்டாலும் அடுத் மெயின் பாயிண்ட் உதயசந்திரன் விஷயத்தில் ஜீரணிக்க முடியாத ஒன்று.

வீட்டோடு மாப்பிள்ளையாய் உதயசந்திரனை கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. பரம்பரை பணக்காரனாய் பங்களாவ்ல உயர்ரக கார்களில பவனி வருகிறவன் அவளுக்காக இந்த ஓட்டு வீட்டில் வந்து குடியிருப்பானா? ஆக அந்த ஸ்டேட்டஸ் விஷயம் நிச்சயம் நடக்காத ஒன்றுதான்!

அதனால் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அவளின் மனக்கணக்கு குறியீட்டில் இந்த உதயசந்திரனை கொஞ்சமும் பொருத்திப் பார்க்க முடியாது. அதனாலே உதயசந்திரனை கணக்கில் எடுத்துக் கொள்ளாதபடி நிராகரிக்க வேண்டிய கட்டாயமும் அவளுக்கு.

இரண்டு நாள் யோசித்து தெளிவாய் சிந்தித்தவள். இனியும் காலம் தாழ்த்தாமல் இது பற்றி உதயசந்திரனிடம் பேசி தன் நிலையை அவனுக்கு உணர்த்திவிட வேண்டும் என்ற முடிவிற்கு வந்தாள்.



## 6

வாணி முடிவெடுத்ததோடு தாமதிக்கவில்லை. அன்று அலுவலக மதிய உணவு இடைவேளையின் போதே ஓய்வறையில் தனியே இருந்த உதயசந்திரனிடம் பேசச் சென்று விட்டாள்.



குஷன் சீட் ஒன்றில் தளர்வாய் சாய்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவன் விறுவிறுவென தன்னை நோக்கி வந்து கொண்டிருக்கும் வாணியைக் கண்டு முகம் மலர நிமிர்ந்தான்.

அதிசயத்தோடு கண்களை விரித்து தன்னை ஆவலோடு அவன் பார்ப்பதை கொஞ்சமும் பொருட்படுத்தாதவளாய் எதிர் இருக்கை ஒன்றை இழுத்துப் போட்டு அவன் முன் உட்கார்ந்தாள் வாணி.

"உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்... என்று அவள் ஆரம்பித்த போது அவன் கொஞ்சமும் அதிராமல் கொண்டிருந்த புன்னகையை பெரிதாக்கினான்."

தாராளமாக... எந்த விஷயம் வேண்டுமானாலும் பேசலாம். இன்னும் அரை மணி நேர ஓய்வு அவகாசமாய் இருக்கிறது.

சொன்னவன் வேண்டுமென்றே எந்த விஷயம் வேண்டுமானாலும்... என் வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்து எதற்கோ அழைப்பு விடுவிப்பது போலவே வாணிக்குத் தோன்றியது.

எதுவானாலும் அவள் பேச வந்ததும் அது பற்றிதானே! அவனே ஆரம்பித்து எதிர்பார்த்தால் அதைப் பேசுவதும் எளிதுதானே...? நினைத்தவள் நேரிடையாகவே விஷயத்திற்கு வந்து விட்டாள்.

"இதோ பாருங்கள் மிஸ்டர் உதயசந்திரன், நான் பேச வருவது நீங்கள் தினம் என்னைச் சுற்றி சுற்றி ரோமியோ போல் அலைவது பற்றித்தான்..."

அவள் சொன்னதற்கு எவ்வித அதிர்வும் கொள்ளாமல் ஏதோ சுவாரஸ்யமாய் கதை கேட்பது போல், "ம்ம்... சொல்லுங்கள்... என்றான்" உதயசந்திரன்.

கண்கள் அகல விரிய ஒரு கணம் முறைத்து விட்டு குரலில் உஷ்ணத்தைக் காட்டினாள் அவள்.

இந்த விஷயத்திற்கு இன்றோடு ஒரு முடிவு கட்டியாக வேண்டும். அதனால் நான் மனதுள் ஒரு தீர்மானத்தை எடுத்து விட்டேன்.

"ம்ம்... நல்ல முடிவு! உங்கள் தீர்மானத்தை நானும் வரவேற்கிறேன். தெரிந்து கொள்ள ஆவலாய் இருக்கிறேன்..."

அவன் தலையை வெகுவாய் ஆட்டியபடி பேசியது அவளுக்கு எரிச்சலையே தந்தது. புருவம் உயர்த்தி மீண்டும் பார்வையால் எரித்தவள், "மிஸ்டர் எனது முடிவின் படி நீங்கள் உங்கள் காதல் ரோமியோத்தனத்தை உடனடியாக நிறுத்தியாக வேண்டும். இல்லாவிட்டால்..."

அவள் நிறுத்த "ம்ம்... சொல்லுங்கள்..." என்றான் அவன் எவ்வித உணர்ச்சியுமில்லாமல்.

இல்லாவிட்டால்... தக்க விளைவுகளை உடனுக்குடன் சந்திக்க வேண்டியிருக்கும்... வேகமாய் முடித்தாள் அவள்."

"தக்க விளைவுக்ள என்றால்..?" என்றான் அவன் இழுத்து விளக்கம் கேட்பவனாய்.

அவன் கேட்டதற்கு ஒரு நிமிடம் பதில் சொல்லாமல் பெரிதாய் மேலும் கீழும் மூச்சு வாங்கினாள்.

பின் "டக்கென குனிந்து பாதங்களில் கிடந்தவைகளை எடுத்து உயர்த்திக் காட்டினாள்."

அவனும் ஒரு கணம் புரியாமல் "திகைத்துதான் போனான்."

"என்ன புரியவில்லையா? செருப்படிகள் விழும்! என்றாள் தெளிவான குரலில் விளக்குவது போல."

உதயசந்திரன் நிஜமாக இப்படியொரு செய்கையையும் வார்த்தையையும் எதிர்பார்க்கவில்லை என்பது அவன் முக அதிர்வில் இருந்தே தெரிந்தது.

"கண்ககளை அகல விரித்து அவளை நன்கு உற்றுப் பார்த்தான்."

"என்னைப் பார்த்தா இப்படிச் சொல்கிறாய்?"

"அவள் பதில் சொல்லாமல் முறைத்தபடியே தலையை ஆட்டினாள். அவன் கோபம் அதிகமாகியது."

"நான் உன் மேலதிகாரி. தெருப் பொறுக்கி இல்லை..."

"ஆனால்.. மேலதிகாரி நடந்து கொள்ளும் விதம் தெருப்பொறுக்கி போல்தானே இருக்கிறது?"

கண்கள் நிலை கொத்தியது போல் இருவரும் ஒருவரையொருவர் சில நிமிடங்கள் முறைத்துப் பார்த்தனர்.

"ஆல் ரைட், என்னதான் சொல்ல வருகிறாய்?"

"உங்கள் ரோமியோத் தொல்லையை நீங்கள் உடனடியாக நிறுத்திவிட வேண்டும்...."

"அப்புறம்...?"

"அப்புறமென்ன...? நீங்கள் பாட்டுக்கு உங்கள் வேலையைப் பாருங்கள். நான் என் வேலையைப் பார்க்கிறேன். உங்களால் எனக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படக் கூடாது. அப்படி ஏற்பட்டாலும் நான் பொறுத்துக்கொள்ளப் போவதில்லை. உடனே பதிலடிதான்...!"

"ஓஹோ...!"

"எனக்குத் தேவையான பதில் ஓஹோ... இல்லை. இனி... திருந்தி விட்டேன்.. நிறுத்தி விடுகிறேன் என்பது தான்...."



"ம்ம்... சரி... நிறுத்தி விடுகிறேன்....."

சொல்லும்போதே அவன் முகம் பாறை போல் இறுக ஆரம்பித்தது.

அவள் சட்டென முகம் வெட்டி அகலப் போனாள்.

"நில்... ஒரு நிமிடம்..."

குரல் மாறி அவன் கூப்பிட அதே வேகத்தில் திரும்பியவள் நின்றாள்.

"உண்மையாகச் சொல். உனக்கு என் மீது எந்தவித விருப்பமும் இல்லையா?"

"குரல் மாறி கனிவும் கெஞ்சலுமாய் அவன் கேட்ட விதம் ஒரு கணம் அவளைத் தடுமாறத்தான் வைத்தது."

"சீறும் சிங்கம் போல் ஆறடி உயரத்தில் திண் தோள்களுடன் ஆஜானுபாகுவான உடம்போடு, களையானமுகமும், துளைக்கும் விழிப் பார்வையும் உதடுகளில் தோன்றி மறையும் அந்த வசீகரச் சிரிப்பும் அந்த கம்பீரமான ஆளை விழுங்கும் ஆளுமையும்... நிச்சயம் இவன் தட்டிக் கழிக்கக் கூடிய பர்ஸனாலிட்டி இல்லைதான் என்பதை அவளுக்குத் தெளிவாய் பறை சாற்றத்தான் செய்தது."

ஆனாலும் இந்த உதயசந்திரன் அவள் போட்டு வைத்திருக்கும் மனக் கணக்கு வட்டத்தில் பொருந்தாதவனாயிற்றே...! அதற்காகவாவது அவனைக் கட்டாயமாக நிராகரிக்க வேண்டிய சூழ்நிலை அவளுக்கு.

உதடுகளிலும் முகத்திலும் பிடிவாதமான ஒருவித செயற்கை இறுக்கத்தைக் கொண்டு வந்தவள், "ஐ...ஆம் ஸாரி!" எனக்கு அப்படி எந்தவொரு எண்ணமும் இல்லை.. என்றாள் தெளிவான குரலில்.

"அவளது பதில். நம்ப முடியாத அதிர்ச்சியுடன் கேட்டவன் தன் முகத்தை முன்னால் கொண்டு வந்து, நிஜமாகவா சொல்கிறாய்? என்றான் குரல் கம்ம."

"நிஜமாகத்தான்....!"

மறுபடியும் அழுத்தந்திருத்தமான குரலில் உச்சரித்து விட்டு விறுவிறுவென அங்கிருந்து அகன்றாள் அவள்.

அவள் அகல... அவளது முதுகை துளைப்பது போல் ஊடுருவலான பார்வை பார்த்து அவன் வெறிப்பது அவளுக்கும் புரிந்தது.

தன் இருக்கையில் வந்து அமர்ந்தும் வேகமாய் மூச்சு வாங்கினாள். இருப்புக் கொள்ளாமல் கன்னத்தில் கை வைத்தபடி சிந்தித்தாள். அதிகப்படியாக பேசி மிரட்டி விட்டோமோ? என தவித்தாள்.

ஆனாலும் உதயசந்திரன் செய்தது தவறுதானே? விருப்பமில்லை என்று சொல்லியும் விடாது விரட்டி ரோமியோ போல் மன உளைச்சலை ஏற்படுத்த முயன்றது.... அவளுக்கு எவ்வளவு எரிச்சலை ஏற்படுத்திடியது,

இனியும் இதை சகித்துக் கொள்ளக்கூடாது என்று தானே முடிவெடுத்து இவ்வளவையும் சொல்லியிருக்கிறாள்?

எந்தவொரு ஆணிடமும் இப்படி இதுவரை முகத்திலடித்தாற்போல் மிரட்டலாய் அவள் பேசியது இல்லையே...! அதனாலே கம்பீரமான பர்ஸனாலிட்டி உள்ள அவனிடம் அப்படி எச்சரித்துப் பேசுவது அவளுக்கும் வலிக்கத்தான் செய்தது.

ஆனாலம் வேறு வழியில்லையே... காய்ச்சல் என்று வந்த பிறகு கஷாயம் குடித்துத்தானே ஆக வேண்டும்...? அதனால் தான் உதயசந்திரனிடம் பேசியது முற்றிலும் சரியே... என்ற முடிவுக்கு வந்து நிம்மதியடைந்தாள் வாணி.



# 7

வாணி நினைத்தது போலவே உதயசந்திரனும் அதிர்ந்துதான் போயிருந்தான். வாணியின் அந்த மிரட்டலான நடவடிக்கை அவனை வெகுவாய் பாதித்து நிலை தடுமாற வைத்திருந்தது.

வாணியிடம் இருந்து இவ்வளவு வேகமான வார்தைகள் "செருப்பைத் தூக்கிக் காட்டும்" செய்கையை எல்லாம் அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. என்ன ஒரு கோபம். என்ன ஒரு தைரியம்! அவனிடமே "செருப்படிகள் விழும்..." என வார்த்தைகளால் விளாசி விட்டாளே!

அந்த வார்த்தையே அவளை நிஜமாகவே செருப்பால் அடித்தது போலத்தானே இருந்தது. யாரை மனதுள் வைத்து பூஜிக்க நினைத்தானோ அவளே அவனது முகத்தில் "ச்சீ.. போ...!' என காறி உமிழ்ந்தால் எப்படி இருக்கும்?

சில நொடிகள், நிமிடங்கள் எதுவும் ஓடாமல் அப்படியே பேதலித்தவன் போல்தான் சிலையாய் உட்கார்ந்திருந்தான். இப்படி ஒரு அவமானம் அவனது வாழ்வில் இதுவரை ஏற்பட்டதில்லை. ஏன், அவனுக்கு நிகழும் என கனவிலும் நினைக்க முடியாத ஒன்றுதான்.ஆனால் நடந்து விட்டதே!

"சிறிய பெண்... புத்திசாலி என்றெல்லாம் சீண்டி விளையாடினால்... இப்படிப் பாம்பாய் மாறி கொட்டி விட்டாளே...!'

இது பெரும் அவமானம்தான்! அவமதிப்புதான்! தலையைத் தொங்கப் போட்டவனாய் அப்படியே கொஞ்ச நேரம் கவிழ்ந்து யோசித்தான் உதயசந்திரன்.



அவள் சொன்ன வார்த்தைகளின் வலியை விட, எனக்கு அப்படி எந்தவொரு எண்ணமும் இல்லை... என வாணி தெளிவாய் உச்சரித்த மீண்டும் மீண்டும் அவன் காதுகளில் ரீங்காரமிட்டது.

"என்ன... அது உண்மையா?'

நிஜமாகவே... வாணிக்கு.. அப்படி ஒரு எண்ணமே இல்லையா?

இனி அவளைப் பார்க்கும் போதெல்லாம் ஒருவித குற்ற உணர்வுடன் தவிக்கப் போகும் முகத்தை எப்படி எங்கே போய் வைத்துக் கொள்வது?

ரொம்ப நேரம் ஒன்றும் ஓடாதவனாய் சிந்தனையில் அலைகழிந்து கொண்டிருந்த உதயசந்திரன் ஒரு பத்து பதினைந்து நிமிடங்களுக்குப் பின் இயல்புக்கு வந்தான்.

அவன் முகத்தைப் போலவே மனதுள்ளும் ஒரு இறுக்கம் கூடியது.

அவள் வாணி தெளிவாக தன் முடிவை சொல்லி விட்டாள். உன் மீது எனக்கு எந்தவித விருப்பமும் இல்லை என்று.

இனியும் அவளே கதி என காதல் பித்து பிடித்து அலைய அவன் ஒன்றும் கிறுக்கன் இல்லை.

அவனுக்கும் மானம் இருக்கிறது. தன்னைப் பிடிக்காத பெண்ணை உதறித் தள்ளும் ரோஷம் இருக்கிறது.

"ஆக.... என்ன ஆனாலும் சரி."

இனி அவளை மறந்துவிட வேண்டியதுதான். அவள் பக்கம் தலை திருப்புதல் என்ன.... இனி அவள் முகத்திலேயே விழிக்கக் கூடாதுதான்!

படபடவென பல தீர்மானங்களை மனதுள் ஓடவிட்டவன் உடனடியாக அவைகளைச் செயல்படுத்தவும் ஆரம்பித்தான்.

முதல் வேலையாய் டான்ஸ் ஸ்கூலுக்கு பயில வருவதை நிறுத்தினான். மறுநாள் அதைவிட ஒரு படி மேலே போய் அலுவலகத்திலும் உற்பத்திப் பிரிவில் இருந்த அவனது மேனேஜர் வேலையை டிவிஷனல மேனேஜரிடம் பேசி பர்ச்சேஸிங் செக்ஷனுக்கு மாற்றிக் கொண்டான்.

"அதாவது... வாணியை.... அவள் முகத்தில் தினம் முழிக்கத் தேவையில்லாத வேலை!' பழைய உற்பத்திப் பிரிவு என்றால் மேனேஜர் என்கிற முறையில் வாணி பலமுறை வந்து அவனைச் சந்திக்க வேண்டியிருக்கும். உற்பத்தி தகவல்களை அடிக்கடி வந்து சொல்ல வேண்டியிருக்கும். அதைத் தவிர்க்கவே மேலிடத்தில் பேசி வலுக்கட்டாயமான மாற்றல் ஒன்றை வாங்கிக் கொண்டான் உதயசந்திரன்!

இனி... இதனால் அவன் நினைத்தது போல் வாணியைச் சந்திக்க வேண்டியதில்லை. அவள் முகத்தில் விழிக்க வேண்டிய அவசியமும் இல்லை!

உதயசந்திரனின் இந்த தடலாடி நடவடிக்கை வாணியை உண்மையாகவே திகைப்பாக்கி அதிரத்தான் செய்தது.

மறுநாள் டான் ஸ்கூலில் அவன் இல்லாததை கண்டு அவன் படிப்பதை நிறுத்தி விட்டான் என்பதை உடனடியாக புரிந்து கொண்டாள்.

அவளுக்குத் தெரியுமே! அவன் நடனம் படிக்கச் சேர்ந்தது ஆர்வத்தில் இல்லையே... அவளுக்காத்தானே!

சரிதான்... நேற்று நாம் கொடுத்த கொடையில் ஆளுக்கு புத்தி வந்து விட்டது என்று நினைத்துக்கொண்டாள். ஆனால் அலுவலகம் சென்றபோது அவன் வேண்டுமென்றே வேறு செக்ஷனுக்கு தன்னை மாற்றிக்கொண்டு தன்னைப் பார்ப்பதை தவிர்க்க ஆரம்பித்தது அவளுக்கு என்னவோ போல் தான் இருந்தது.

மூன்றாம் நாள் தற்செயலாய் அலுவலக காரிடாரில் இருவரும் எதிர் எதிராய் வரும் சூழ்நிலை அமைந்தபோது கூட சற்றும் அவளைக் கவனியாதது போல் விடுவிடுவென குனிந்த தலையுடன் அவளைக் கடந்தான் உதயசந்திரன்.

அப்படிக் கடக்கும்போது கம்பீரமான அவன் முகத்தில் தெரிந்த அந்த என்றுமில்லாத இறுக்கத்தை அவள் விழியோர மை விழிகள் கவனிக்கத் தவறவில்லை.

அதற்குப் பின் வேலை விஷயமாய் இன்னொரு சமயம் இருவரும் ஒரே அறையில் ஏதோ குறிப்புகளை தேடும் போதும் சற்றும் சலனமில்லாமல் அவன் பாட்டுக்கு அவன் வேலையை கவனித்துவிட்டு அகன்றான்.

வாணிக்கு ஒரு கணம் உள்ளுக்குள் சங்கடமாயும் இருந்தது. பிறவிப் பணக்காரன், பொறுப்பான பதவியில் இருப்பவன் அவனைப் போய் தெருப் பொறுக்கி ரேஞ்சுக்கு தரம் இறக்கி சற்று அதிகம்படியாய் திட்டி விட்டோமோ.. என தவிப்பாய் குமைந்தாள்.

நாசூக்காய் கொஞ்சம் உரைத்துப் புரியும்படியாய் சொல்வதை விட்டு விட்டு அவசரப்பட்டு தரக்குறைவாய் பேசி அவன் மனதை நோகடித்து விட்டோமோ... எனவும் அவள் நினைப்பு ஓடியது.



# 8

உதயசந்திரன் அப்படி விலகிப் போனதில் ஒரு பக்கம் கஷ்டமாய் உணர்ந்தாலும் மறுபுறம் வாணிக்கு அமைதியாகவும் இருந்தது. எவ்வித மனச்சலமும் சங்கடமும் இல்லாமல் அலுவலகத்திலும் டான்ஸ் ஸ்கூலிலும் நடமாட முடிந்தது.

எல்லாவற்றையும்விட இந்த அன்பான வீட்டில் ப்ரியமான சூழ்நிலையில் எப்போதும் இருக்கலாம் என்ற நிம்மதியும் வந்தது. மேலும்



டான்ஸ் ஸ்கூலில் உடன் வரும் அண்ணி மாலினி தினமும் அவளை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தாள்.

இன்னும் மூன்று மாதத்தில் உன் பிறந்த நாள் வருகிறது அல்லவா? அன்று பிரமாதமாய் பிரும்மாண்டமாய் உனக்கு விழா எடுத்து நடன அரங்கேற்றம் பண்ணி விடுவோம்... என்று மாலினி சொன்னபோது வாணி திகைக்கத்தான் செய்தாள்.

"என்ன எனக்கா... என்ன அண்ணி சொல்கிறீர்கள்?" என வியந்தவளின் வாயை அடக்கினாள் அவள். "இதில் வியப்படைய என்ன இருக்கிறது வாணி?" முறைப்படி நடனம் பயின்ற பின் ஒரு நல்ல நாள் பார்த்து அரங்கேற்றம் செய்வதுதானே முறை. அதனால் அதை ஒரு விழா போல் எடுத்து கொண்டாடி விடுவோம்...

"ஐயோ. அதெல்லாம் வேண்டாம்... அண்ணா ஒரு போதும் ஒத்துக் கொள்ள மாட்டார்..."

"அட... நீ.... சும்மா இரு... !' என மாலினி ஒரு அதட்டு போட்டவள், உன் அண்ணனைப் பற்றி எனக்குத் தெரியாதா? அவரிடம் எப்படி சம்மதம் வாங்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். அதை நான் பார்த்துக் கொள்கிறேன். "நீ... உன் பயிற்சியைக் கவனி.... டான்ஸ் ஸ்கூலில் ஆடிப் பார்த்தால் மட்டும் போதாது வீட்டிலும் வந்து கொஞ்சம் பயிற்சி எடுக்க வேண்டும். நடன அசைவுகள் சரியாக வருகிறதா என்று செய்து பார்க்க வேண்டும்.... என சொன்னதோடு நிற்காமல் இரவு நேரங்களில் மொட்டை மாடிக்கு அழைத்துச் சென்று அவளை ப்ராக்டிஸ் செய்யவும் வைத்தாள்."

வாணிக்கே அண்ணியின் ஈடுபாடு தன் முன்னேற்றத்தில் அண்ணி காட்டும் அக்கறை மலைப்பாய் ஆச்சரியப்படுத்தும்படி இருந்தது. ஒரு சமயம் அடக்க முடியாமல் வாய்விட்டு கேட்டபோது கூட, "என்ன வாணி இது கூடவா புரியவில்லை?" இவ்வளவு நடன ஆசைகளும் கனவுகளும் எனக்கு இருந்தது நான். என்ன அவைகள் நிறைவேற முடியாதவைகளாய் கனவுகளாகவே எனக்குப் போயிற்று. அதனாலேயே அவைகளை உன் மூலமாக நடத்தி வைத்து ஆசை தீர ஆனந்தம் கொள்கிறேன் என்பாள்.

வாணியும் விடாது, என்ன நானும் நீங்களும் ஒன்று தானா? என்னை உங்களாகவே நீங்கள் எண்ணிக் கொள்கிறீர்களா? அவ்வளவு பிரியமா என் மேல் உங்களுக்கு? என்றபோது, "இருக்காதா... பின்னே...? நீ... யார்? என் செல்லமான அன்பு மைத்துனி அல்லவா?" என்று வாணியை இறுக கட்டிக் கொண்டு மாலினி சொல்லும் போது அப்படியே அவள் பாசத்தை எண்ணி மனம் குளிர்ந்துதான் போவாள் வாணி.

அண்ணியின் இந்த பாசத்தை அடக்க முடியாமல் அண்ணனைத் தனியே கூப்பிட்டுக் கொட்டுவாள் வாணி. அவனும் எல்லாவற்றையும் ரசித்துக்

கேட்டு விட்டு ஆச்சரியம் கொள்வான். "உண்மைதான் வாணி, நான் கூட உனக்கு அண்ணியாய் வருகிறவள் எப்படி இருப்பாளோ உன்னை எப்படி நடத்துவாளோ... என பயந்து கொண்டிருந்தேன். ஆனால் அவள் உன் மீது காட்டும் அன்பைப் பார்த்தால் எனக்கே வியப்பாய் இருக்கிறதுரு. மேலும்.."

"சொல்லுங்கள் அண்ணா:..."

"உன் மீது இவ்வளவு அன்பைக் காட்டுகிறவள் அதில் கால் பகுதியையாவது என் மீது காட்ட மறுக்கிறாளே..." என்ற ஆதங்கம் எனக்கு உண்டு...

"அவன் சொல்ல..புன்னகையுடன் தலையை படபடவென ஆட்டினாள் வாணி...."

"அதுவும் எனக்குத் தெரியும். அது பற்றியும் மாலினியிடம் நீ சொல்வதற்கு முன்பே கேட்டிருக்கிறேன். அதற்கு அண்ணி என்ன பதில் சொன்னார்கள் தெரியுமா?"

"என்ன சொன்னாள்? என்றான் சுகேசன் ஆவலாய்."

"எல்லாம் உன் சிடுசிடு சுபாவம் தான். எப்போதும் கடுகை போட்டாற் போல் நீ வெடித்துப் பேசுவது அண்ணிக்கு பயமாக இருக்கிறதாம். அதனாலே உன்னைப் பார்த்ததுமே சில சமயம் நடுக்கம் கூட வந்து விடகிறதாம்...."

"ஓஹோ! இப்படியெல்லாம் வேறு உன்னிடம் புளுகியிருக்கிறாளோ....? வரட்டும்... அவள்... அவளை இன்று ஒரு வாங்கு.. வாங்குகிறேன்... என்று சுகேசன் பற்களைக் கடிக்காத குறையாய் கோபப்பட அவன் தலையை செல்லமாய்க் குட்டி கலகலவெனச் சிரித்தாள் வாணி.."

"பார்த்தாயா... பார்த்தாயா...? இந்தக் கோபம்தான்.... இந்த சிடுசிடுத்தனம்தான் உன்னை ரெம்பவும் சிறுமைப்படுத்துகிறது. அண்ணியை உன் மீது பயம் கொள்ளவைக்கிறது. இதை முதலில் நீ நிறுத்து... நிறுத்த வேண்டும்... என்றாள் வாணி."

அவள் கேட்டதற்கு பலஹீனமாய் தலையை அசைத்தான் சுகேசன்.

"இல்லை... வாணி... அது... என்னால் முடியாத விஷயம்... இந்த சிடுசிடுத்தனம் நான் செய்வது இல்லை.. என் சுபாவமே அப்படித்தான்..."

ம்ஹூம்....! அப்படியெல்லாம் சொன்னால் நான் விட்டுவிடப் போவதில்லை. நான் மாற்றுவேன். உன்னை மாற்றிக் காட்டட்டுமா?

"எப்படி வாணி அது?"

நான் சொல்கிறபடி தினமும் செய். உன் சிடுசிடுத்தனம் மறைந்து விடும். நீ புன்னகை மன்னனாய் மாறி விடுவாய்....

"நான் என்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்..!"



வேறொன்றுமில்லை. தினமும் கண்ணாடி முன் நின்று ஒரு ஐந்து நிமிடம் ஒதுக்கி நீ அதைச் செய்ய வேண்டும்....

"எதை வாணி?"

"வேறு எதை? சிரிப்பதைத்தான்...!"

"என்ன சிரிப்பதையா?"

"ஆமாம். கண்ணாடி முன் நின்று வெவ்வேறு வகையில் வித விதமான கோணங்களில் நீ சிரிக்க வேண்டும். பற்கள் தெரிய நன்றாகச் சிரித்துப் பழக வேண்டும்...."

வாணி சொல்ல சுகேசன் கண்கள் விரித்து அவளை உற்றுப் பார்த்தான். நீ விளையாடவில்லையே... நிஜமாகத்தானே சொல்கிறாய்?

"ஐயோ! நிஜம் அண்ணா... ஒரு புத்தகத்தில் இது பற்றி விரிவாக எழுதி விளக்கியிருந்தார்கள். நீ மட்டும் கொஞ்ச நாட்கள் செய்து பார். உன் சுபாவத்தில் நல்ல மாற்றங்கள் தெரியும்."

வாணி சொல்ல பதிலுக்கு வேகமாய் தலையை ஆட்டினான் சுகேசன்.

"நீ... சொல்லி விட்டாய் அல்லவா...? பார்... நாளைக்கே இந்தப் பயிற்சியை ஆரம்பித்து விடுகிறேன்... எனச் சொன்னவன் சொன்னபடியே மறுநாள் முதல் பயிற்சியை ஆரம்பித்து விட்டான்."

தினம் காலை எழுந்ததும் தனியே போய் கண்ணாடி முன் நின்று சத்தம்வராமல் தன் முகத்தை அப்படியும் இப்படியுமாய் அஷ்டகோணலாக்கி சிரிக்க ஆரம்பித்தான். சிரித்துப் பழக ஆரம்பித்தான்.

அப்படி அவன் யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாய் கண்ணாடி முன் நின்று சிரிப்புப் பயிற்சி எடுப்பதைப் பார்த்த மாலினிக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை. "வாணி.. இங்கு வந்து பார்!" ஒரு புன்னகை மன்னன் நின்று கொண்டு என்னமாய் சிரிக்காறார் பார்! என கிசுகிசுக்க ஓடிஓடிவந்து பார்த்த வாணிக்கும் பொங்கிய சிரிப்பை அடக்க முடியவில்லை.

இருவரும் குலுங்காத குறையாய் சிரிக்க திரும்பிப் பார்த்த சுகேசன் அசடாய் அசட்டுப் புன்னகை புரிந்தான்.

அன்றிலிருந்து மாலினி சுகேசனுக்கு புன்னகை மன்னன் என்ற பட்டமும் கொடுத்து விட்டாள்.

தினம் வாணியிடம் பேசும் போது இன்று நம் புன்னகை மன்னன் என்னிடம் இரண்டு முறை சிரித்தார். இன்று மூன்று முறை சிரித்தார் என சொல்வது, கிண்டலிப்பது வாடிக்கையாயிற்று.

அப்படி சுகேசன் சிரித்துப் பேச முயன்றது கூட செயற்கையான ஒன்றுதான் என மாலினிக்கு தெரிந்து விட்டதால் அவள் சுகேசன் சிரிப்பதை பெரிதாய் நினைக்கவில்லை. அவன் சிடுசிடு சுபாவத்தை மாற்ற முடியும் என நம்பவும் இல்லை.

இருந்தாலும் வாணிதான் விடாது, அண்ணி, நீங்களும் அண்ணனிடம் சிரிக்கச் சிரிக்க பேசுங்கள். அண்ணன் தன் சுபாவத்தை மாற்றி விடுவார்... என நச்சரித்துக் கொண்டிருந்தாள்.

அதற்கும் மாலினி விடாது

உனக்கு நானும் அவரும் சிரிக்க வேண்டும். அவ்வளவுதானே? கவலையை விடு. இன்று கடைத் தெருவுக்குப் போய் நல்ல ஜோக் புக் ஒன்று வாங்கி வந்து விடுகிறேன். அதை இருவரும் இரவு உட்கார்ந்து படித்து விழுந்து சிரிக்கிறோம். சரியா! என்பாள் அதே கேலியோடு.

இப்படியாக சிறு சச்சரவுகள், பெரும் சிரிப்பலைகள் என ஆனந்தமாய் போய்க் கொண்டிருந்த குடும்பச் சக்கரத்தில் திடும்மென ஒரு புயல் மாலினி தம்பி உருவத்தில் உள்ளே நுழைந்தபோது வாணி திகைத்துதான் போனாள்.



# 9

மாலினியின் தம்பி "கிஷோர்," சொந்த ஊரான திம்மம்பட்டியில் டிகிரி முடித்து வேலை வெட்டி இல்லாமல் பொறுப்பில்லாமல் அலைவதால் பொறுப்பு வர சென்னைக்கு அனுப்பப்பட்டவன். மாலினிக்காக அண்ணன் சுகேசனும் தங்களுடன் இருக்கட்டும். ஒரு வேலை வாங்கி அவனுக்கு கொடுத்து விடுகிறேன் என ஒத்துக்கொண்டான்

வாணிக்கு கிஷோரின் செய்கைகள் கொஞ்சமும் பிடிக்கவில்லைதான். ஆனாலும் அண்ணி மாலினிக்காக எல்லாவற்றையும் அவள் பொறுத்துப் போக வேண்டியதாயிற்று.

அதுவும் காலை எழுந்தது முதலே முகம் சுளிக்கும்படி ஆரம்பமாகிவிடும். தினம் விடிந்தும் விடியாத அதிகாலைப் பொழுதில் அவள் மொட்டை மாடியில் கால[illegible] நடப்பது வழக்கம். பக்கத்து வீட்டு தென்னைமரங்கள், தூரத்து ஆலமரம், இளந்தளிராய் துளிர் விடும் ஆரங்சு வண்ண சூரியன், மரக்கிளைகளில் பறவைகளின் விதிவிதமான இனிமை குக்கூக்கள் என இயற்கையை வெகுவாக ரஸித்தபடி அவள் நடைப்பயிற்சி செய்வாள். மனதில் பெரும் உற்சாகம் கொள்வாள்.

ஆனால் அதற்கு சோதனையாய் அவள் அப்படி அதிகாலை எழுந்து மொட்டை மாடி வரும் சமயமாய்ப் பார்த்து கிஷோரும் அங்கு தோன்றினாள். அதுவும் வெறும் கால் டவுசர் ஒன்றை போட்டுக் கொண்டு எக்ஸர்ஸைஸ் செய்கிறேன்... என்ற சாக்கோடு.



மெலிந்த நொடிசலான தேகத்தை வைத்துக் கொண்டு அவன் பெரிய பாடிபில்டர் போல் நெஞ்சை உதுக்கி உடற்பயிற்சி செய்வதைப் பார்க்கும் போது வாணிக்கு சிரிப்பு பொத்துக்கொண்டுதான் வரும். சரி அதை கவனியாமல் நம் வேலையைப் பார்ப்போம் என்று பார்த்தால் கிஷோர் சளசளவென வம்படிப் பேச்சை ஆரம்பித்துவிடுவான்.

அவன் பேசப்பேச..., அடாடா... இந்த அறுவையிம் வசமாக மாட்டிக்கொண்டோமே என் அவள் தவிக்க ஆரம்பித்துவிடுவாள்.

அந்த தவிப்பும் அண்ணி மாலினி வரும் வரைதான். கையில் சூடான காபிதம்ளருடன் அவளுக்காக மாலினி கொண்டு வந்து புன்னகையுடன் நீட்டுவாள். முகம் மலர தனக்காக மெனக்கெட்டு படியேறி வந்து கொடுக்கும் அண்ணியின் அன்பில் மெய்சிலிர்த்துதான் போவாள் அவள்.

ஆனாள் மாலினியோ அதற்கு மேல் ஒரு படி போவாள். அரைடவுசருடன் நிற்கும் கிஷோரை முறைத்து எரிக்கும் பார்வை பார்ப்பாள். "டேய்... என்னடா இது கோலம்? சட்டையோ... பனியனோ இல்லாமல் உனக்கு வெட்கமாயில்லை...? பெண் பிள்ளைகள் நடமாடும் இடத்தில் இப்படியா அரைகுறையாய் அலைவது?" எனச் சீறுபவள் விடாது, ஆமாம் இங்கு மொட்டை மாடியில் உனக்க என்னவேலை? அவள் வாணி தினம் காலையில் நடைபயிற்சி செய்யும் நேரம்... நீ இங்கு வந்து என்ன இடைஞ்சல் கொடுக்கிறாய்..? நாளை முதல் இங்கு வந்தாயோ... உனக்கு... நிச்சயம் அடிதான்! என கை நீட்டி எச்சரித்து நிஜமாகவே அவனை மிரட்டி விரட்டுவாள்.

அவளது வார்த்தைகளால் நொந்து தலையைத் தொங்கப் போட்டபடி கிஷோர் போகும்போது வாணிக்கு அதைப் பார்க்க பாவமாக இருக்கும் விடுங்கள் அண்ணி... சின்ன சிஷயம்.. இதற்குப் போய் அவரை.... என்பாள்.

"அட...! இது சின்ன விஷயமில்லை வாணிக்கண்ணு. என் தம்பியை அந்த ரோமியோத் தடியனைப் பற்றி எனக்குத் தெரியாதா? இப்படி காலையில் தினம் உன்னிடம் பேசுவதை சாக்காய் வைத்துக்கொண்டு எதாவது வழிவான்... தேவையில்லாமல்.... எதையாவது உளறி உனக்கு எரிச்சலைமூட்டுவான். இதையெல்லாம் தவிர்க்கத்தான் அப்படி ஒரு போடு போட்டேன்.... நீ கவலையை விடு...!" என்பாள்.

சிலசமயம் இப்படிப் பட்ட சமயங்களில் ஒருபடி மேலே போய், இதோ பார் வாணிக், கண்ணு அவள் மட்டும் ஏதாவது உன்னிடம் வரம்பு மீறி வாலாட்டினால் சொல்லு. உடனே அவனை பாக்கிங் செய்து கிராமத்துக்கே அனுப்பி விடுகிறேன். என்ன? என்பாள்.

"ஐயா...! அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை..." என வாணிதான் அவளுக்கு சமாதானம் சொல்ல வேண்டும்.

ஆனால் உண்மையில் கிஷோர் சில எரிச்சலூட்டும் சேஷ்டைகள் தினம் செய்யத்தான் செய்வான். அவள் அலுவலகம் கிளம்பும் சமயமாய் பார்த்து யாரோ ஒரு ப்ரண்டிடம் இரவல் பைக் வாங்கி வந்து அவளை

வேலைக்கு கொண்டுவிட தயாராய் நிற்பான். அவன் புது பேண்ட், ஷர்ட்டுடன் தலையை அடிக்கடி கோதிக் கொண்டு, ஸ்டைல் கூலிங் கிளாஸுடன் முகத்தை அஷ்ட கோணலாக்கி ரோமியோ போஸில் நிற்பதைப் பார்க்கும் போது, என்ன இது லூசுத்தனம்? என எரிச்சலாய்த்தான் உணர்வாள்.

வேண்டாம். பஸ் ரெடியாக இருக்கிறது... என்று முகம் சுழித்துவிட்டு வேகமாய் சென்று விடுவாள் அவள். சில சமயங்களில் அவள் வேலை செய்யும் அலுவலகம் பக்கமம் வேண்டுமென்றே கிஷோர் நடமாடுவது உண்டு, ஒரு வேலையாய் வந்தேன். அப்படியே உன்னை பார்த்து விட்டுப் போலாம் என்று... என வழிவான்.

இல்லையென்றால், வருகிறாயா...? சின்னதாய் ஒரு டிபன்...? ஒரு கப் காபி...? என பக்கத்து ஹோட்டலைக் காட்டி கெஞ்சோ... கெஞ்சென்று கிறங்குவான்.

ஒரு நாள் இப்படித்தான் அவன் கெஞ்சுதலுக்காக மனமிறங்கி ஹோட்டலுக்குள் போனாள். எதோ பெரிய பார்ட்டி கொடுப்பது போல் ஆர்டர் செய்யப் போனவனை தடுத்து டீயும் வடையும் போதும் என்றாள்.

அவள் கப் அண்ட் ஸாஸரில் டீ பருகுவதை எப்போதோ பார்த்த சினிமாக்கதை சுவாரஸ்யமில்லாமல் சொல்லி அறுத்தான். கடைசியில் பெரிய பரோபகாரி போல பர்ஸை எடுத்து சர்வருக்கு கூடுதலாக நூறு ரூபாய் நோட்டு ஒன்றை டிப்ஸாக வைத்தபோது வாணியே திடுக்கிட்டு விட்டாள்.

இவனுக்கேது பணம்? எல்லாம் அண்ணியின் பணம்? அண்ணி செலவுக்கு கொடுத்தது தானே? இதில் இந்த டாம் பீகம் வெற்று பந்தா தேவையா? அந்தக் கோபத்தில் அந்த நூறு ரூபாய் டிப்ஸ் விஷயத்தை அன்றே அண்ணியிடம் போட்டுக் கொடுத்தாள் அவள்.

அன்று இரவு முதுகில் டின் கட்டாத குறையாய் வகையாய் வாங்கிக் கட்டிக்கொண்டான் கிஷோர். எல்லாவற்றையும் பார்த்து வாணி ரஸித்தாலும் ஒருபுறம் அவளுக்கு பாவமாகவும் தோன்றியது.

என்னதான் தம்பி உடன் பிறப்பு என்று இருந்தாலும் அண்ணி மாலினி தனக்காக அவனை இந்த விரட்டு விரட்டி அதட்டுவதை வியப்பாகவே பார்த்தாள்.

அதைவிட ஆச்சரியம் கிஷோர் அக்கா மாலினி அப்படி அதட்டி உருட்டும் போது பள்ளிச் சிறுவன் போல் எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் தலையை குனியவைத்துக் கொண்டு கற்சிலை போலவே நிற்பான்.

எப்படி அண்ணி இது? இவ்வளவு வயதாகியும் உங்களுக்காக பயந்து நடுங்கிக் கொண்டு இருக்கிறாரே? என விசாரிக்க விஷயத்தை பட்டென்று போட்டு உடைத்டதாள் அவள்.

"எல்லாம் நடிப்பு...! நம்பாதே..! என்றாள்".

"என்ன நடிப்பா? என்ன சொல்றீர்கள் அண்ணி?"



"ஆமாம்... வாணிக்கண்ணு..! ... இதே... கிஷோர் என் வீடு என்றால்... என்ன செய்வான் தெரியுமா? பதிலுக்கு பதில் எதிராக கத்தி... ஊரையே கூட்டி விடுவான். இங்கு பெட்டிப்பாம்பாய் அவன் பயந்து பாசாங்கு காட்டுவது நடிப்பு. அந்த நடிப்பும் எதற்காகத் தெரியுமா?".

"எதற்காக? என்றாள் வாணியும் அப்பாவியாய்"

எல்லாம் உனக்காகத்தான்....! என்றாள் மாலினி அவளை அதிரவைத்தாவறு.

"என்ன சொல்கிறீர்கள் அண்ணி?"

வாணி திடுக்கிட மாலினியோ, நான் சொல்வது நிஜம்தான் வாணிக்கண்ணு. கிஷோருக்கு உன்னைக் கட்டிக்கொள்ள வேண்டும்மென கொள்ளை ஆசை. அது அதற்கு... உன் சம்மதத்தை போல்.. நானும் முக்கியமல்லவா? என்னை பகைத்துக்கொள்ளவும் முடியாதல்லவா? அதனால் அந்த பயந்நு நடுங்கும் நடிப்பைச் செய்கிறான். எனக்கு தெரியாதா இது? ஆனால் ஒன்று.... உனக்குத்தான் அப்படி அவன் மீது எந்த எண்ணமம் இல்லையே... அப்படி இருக்கும் போது... அவன் ஆசை எல்லாம் நிராசையாய்த்தான் போகிறது... அவனுக்கு கிடைக்கப் போவதெல்லாம் ஆசை, தோசை, அப்பளவடை.. தான்! அடக்கமுடியயமல் கை கொட்டி சிரிக்க ஆரம்பித்தாள் மாலினி.

தனக்காக அண்ணி மாலினி தன் சொந்த உடன்பிறப்பையே போட்டுத்தாக்கி மகிழ்வதை கண்டு முதல் முறையாய் அதிரத்தான் செய்தாள் வாணி.



## 10

வாணிக்கு அது மிகப்பெரிய ஆச்சரியம்தான்!

தனக்காக சொந்தத் தம்பியையே யாரோ மூன்றாம் ஆள் போல் அண்ணி விரட்டி கிண்டலடித்துக் கொண்டு...?

இதே... வேறு ஒரு பெண அண்ணி இடத்தில் இருந்தால்.. சொந்தத் தம்பியின் ஆசையை நிறைவேற்ற ஒற்றைக் காலில் அல்லவா நிற்பாள்?

ஆனால் இந்த மாலினி...? அதற்கு நேர் எதிராக அல்லவா செயல்படுகிறாள்...?

எதனால்...? அவ்வளவு... அன்பு பாசம் நம் மீது வைத்திருப்பதனால் தானா?

நம்பமுடியாமல் புருவம் உயர வாணி ஒவ்வொரு முறை வியக்கும் போதும் அதை நிரூபித்தாள் அண்ணி.

"இதோ... பார் வாணிக் கண்ணு,... உன் ரேஞ்சுக்கு என் தம்பியெல்லாம் சரிப்படமாட்டான். உனக்கு டாக்டர், இஞ்சினியர், உயர்அதிகாரி என.. ஒரு பெரிய லிஸ்ட்டே வைத்திருக்கிறேன். அவர்களில் யாரையாவது ஒருவரை பிடித்து உனக்கு இன்னும் இரண்டு வருடங்களில் மாப்பிள்ளையாக்கி அழகு பார்ப்பது தான் என் அடுத்த வேலை. என்ன சொல்கிறாய்? நான் அப்படி மாப்பிள்ளை, பார்த்தால்... ஓ.கே... சொல்லி விடுவாய்தானே?"

இரண்டு தோள்களையும் பற்றிக்கொண்டு முகத்தை நேருக்கு நேர் வைத்துக் கொண்டு மாலினி ஆவலாய் கேட்டபோது, ஐயோ... அண்ணி...! நீங்கள் என் மீதுகாட்டும் பாசம் நிஜமாகவே என்னை புல்லரிக்கத்தான் செய்கிறது.... என கண்கள் மின்ன அவளை அப்படியே இறுக கட்டிக் கொண்டாள் அவள்.

அன்று இரவு நிஜமாகவே வாணிக்கு தூக்கம் போய் விடும். சிறுகுழந்தைபோல்தன்னைக் கொஞ்சி தன்னிடம் அபரிதமான பாசம் காட்டி, ஒவ்வொரு விஷயத்திலும் தன்னை மகிழ்வூட்டி, அதிடில் பெரும் சந்தோஷம் கண்டு குதூகலிக்கும் இந்த அண்ணியை எந்த லிஸ்ட்டில் சேர்ப்பது? இப்படியொரு அண்ணிகிடைக்க கொடுத்து வைத்திருக்க வேண்டுமே?

பெரும் புளகாங்கிதம் கொண்டவளாய் அன்று அண்ணிதன் மீது காட்டிய அன்பை நினைத்து நினைத்து சிரிப்பாள்.

கூடவே மறுபடியும் தூங்க விடாதபடி அவளை அந்தக் கவலையும் தீயாய் தொற்றிக் கொள்ளும். இந்த மகிழ்ச்சி இந்த குதூகலம் எல்லாம் இன்னும் எவ்வளவு நாளைக்கு? அண்ணி சொல்வது போல் இன்னும் இரண்டு வருடங்களில் அவளுக்கு கல்யாணம் என்ற ஒன்று நடந்து புகுந்தவீடு சென்று விட்டால்...?

பின் என்னவாகும்...?

இந்த அன்புச் சூழ்நிலை.. எல்லாம்.. காற்றில் கரைந்து கனவு போல் ஆகிவிடுமே..!

அன்பு அண்ணி, அண்ணன், அம்மா என எல்லோரையும் விட்டுவிட்டு யாரோ ஒருவன் பின்னால் அவள் விறுவிறுவென பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடந்து போகிற காட்சி ஒன்றும் கிலியாய் அவள் மனதில் ஒரு நிமிடங்கள் தோன்றி மறைந்தது.

அப்படியே திடுக்கிட்டவளாய் அந்த நடு இராத்திரியல் எழுந்து உட்கார்ந்து விட்டாள் அவள்!



"கடவுளே...! இது... உண்மையில் நடந்து நிஜமாகிவிடுமா?"

பயமாய் அவள் யோசித்த போது தெளிவான குரல் ஒன்று அவள் உள்ளுக்குள் கத்திற்று.

"முட்டாள் பெண்ணே! எல்லோரையும் போல் நீயும் கல்யாணம் பண்ணித்தானே ஆக வேண்டும். காலம் முழுவதும் கன்னியாகவே இருந்துவிடுவாயா? அப்படி உன்னை இருக்கவும்தான் மற்றவர்கள் விட்டுவிடுவார்களா?"

எல்லோருக்கும் போல் உனக்கும் கல்யாணம் என்ற ஒன்று நடக்கத்தான் போகிறது. நீ மறுத்தாலும் தலையில் நாலு தட்டு தட்டி உன்னை மணவறையில் உட்கார்த்தி வைத்து பட்டு வேஷ்டி பட்டுசட்டைக்காரன் ஒருவன் கழுத்தில் மூணுமுடிச்சை போட்டு உன்னை சரசரவென தன் வீட்டுக்கு இழுத்துப் போய் விடுவான்...! இது நடக்கும்தானே?

நினைத்தவளின் மனதில் டக்கென உதயசந்திரனின் பிம்பம் ஒரு கணம் தோன்றி மறைத்தது.

ஆ...! இந்த உதயசந்திரன் கெஞ்சாத குறையாய் அவளை மணக்க கேட்டபோதும் அவள் ஒரேடியாய் மறுப்பு தெரிவித்தது கூட இதற்காக.. இந்த அன்புச் சூழ்நிலையை பிரிய மனமில்லாத காரணத்திற்காகத்தானே?

"பின்...?"

நாளை இந்த உதயசந்திரன் இல்லாவிட்டால் அண்ணி சொல்வது போல் ஒரு டாக்டரோ, இஞ்சினியரோ கயிற்றைக் ட்டி அவளை புகுந்த வீட்டுக்கு இழுத்துச் சென்றுவிடுவார்களே!

இது... அவள் வாழ்க்கையில் நடக்க இருக்கும் பெரும் அபாயம் அல்லவா?

இதை எப்படி தடுப்பது? எப்படி சமாளிப்பது? யோசித்தவளுக்கு விபரீதமாய் கிஷோரின் முகம்தான் ஞாபகத்திற்கு வந்தது.



## 11

எதிலுமே தெளிவாய் சிந்தித்து முடிவெடுக்க கூடிய வாணிக்கு அப்படி ஒரு விபரித யோசனை தோன்றியது பெரும் ஆச்சரியம்தான்!

அதுவும், உப்புக்கு சப்பாணி... என்ற பாணியில் அவள் அப்படி யோசித்தது அவளுக்கே வியப்பாய் கூட தெரிந்தது. ஆனாலும், யார் என்ன

... நம் வாழ்க்கை... வாழப்போவது நாம்.. நம்மை விட நமக்காக வேறு யார் தீர்மானிக்க முடியும்? அக்கரை கொள்ள முடியும்?

மேலும் ஒரு முடிவெடுக்க... மற்றவர்களையோ... ஊரைப்பற்றியோ கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் போதாது. துணிச்சலாய் சிந்தித்து துணிச்சலாகவே முடிவெடுத்துவிட வேண்டியதுதான்!

வாணி அப்படித் துணிச்சலாய் செய்ய நினைத்த விபரிதம் மாப்பிள்ளை விஷயம்தான்! தீவிரமாய் அது பற்றிய பயத்தில் யோசித்த போது கிஷோரின் அஷ்ட கோணலான முகம்தான் அவள் மூளையில் பிரகாசமாய் பளிச்சிட்டது.

கிஷோர்... இந்த அண்ணியின் தம்பி கிஷோரை மட்டும் கட்டிக்கொண்டால்.... அவனும் வீட்டோடு மாப்பிள்ளையாகி அவளுக்கு எவ்வித பிரச்சினையும் வராது அல்லவா? அவளது முக்கியமான தலையாய விஷயமான குடும்ப அன்புச் சூழ்நிலையை அவள் பிரிந்து செல்ல வேண்டிய அவசியமும் ஏற்படாது அல்லவா?

யோசிக்க யோசிக்க அந்த நினைப்பு அவளுள் புசுபுசுவென வளர்ந்து குளிராய் ஆட்டியது. ஆஹா...! இது எவ்வளவு நல்ல கற்பனையாய் தெரிகிறது? இந்தக் கிஷோரை மட்டும் கட்டிக் கொண்டால்... அவள் வாழ்க்கையில் எந்த மாற்றமும் நிகழாமல் அவள் முன்பு போலவே இருக்கலாமே? இது எவ்வளவு ஆனந்தப்படவேண்டி மகிழ்வுக்குரிய விஷயம்?

போதாக்குறைக்கு இந்த கிஷோர் அவளைப் பார்த்து வழியோ வழி என்று வழிந்து பைத்தியம் பிடிக்காத குறையாய் இருக்கிறான். அவன் கணவனாகி... ஒரு வேளை அதன் பின் அவளோடு முரண்டு பிடித்தால் கூட மாலினியிடம் சொன்னால் நமக்காக அவனை இரண்டு தட்டு தட்டி கூட அண்ணி சரி பண்ணிவிடுவாள்.

என்ன... கிஷோர் எல்லா விஷயத்திலும் சுமார்தான். அழகில்... நடவடிக்கைகளில்... சுறுசுறுப்பில்... என எல்லாவற்றிலும் ஐம்பது மார்க்கைத் தாண்ட மாட்டான். இதில் சதா சிகரெட் புகை ஊதும் பழக்கம்... வந்து மூன்று மாதமாகியும் உருப்படியாய் ஒரு வேலையை இதுவரை தேடிக்கொள்ளாத அசட்டுத்தனம்!

இவனை என்ன செய்வது? வளைத்துப் பார்க்கலாமா? திருத்த முடியுமா?

ஒருநாள் முழுவதும் இதற்காக யோசிதத வாணி மறுநாளே காரியத்திலும் இறங்கினாள்.

கிஷோரை மொட்டை மாடிக்கு தனியே அழைத்து விரிவாய் பேசினாள்.



அதன்படி அவன் உடனடியாய் பொறுப்பான ஒரு வேலையைத் தேடிக்கொள்ள வேண்டும். அசடுபோல் அவளை பார்க்கும் நேரமெல்லாம் உளறி வழிவதை விட்டுவிட்டு டீஸன்டாக நடந்து கொள்ள வேண்டும். முக்கியமாய் சிகரெட் என்ற ஒன்று இருப்பதையே அவன் மறந்துவிட வேண்டும் இதெல்லாம் முடிந்தால்... எதிர்காலத்தில் நாம் இருவரும் திருமணம் செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பு கூட அமையும். என்ன சொல்கிறாய்? என தன் மனதில் உள்ளதை எல்லாம் கொட்டி விட்டு ஆவலாய் அவனைப் பார்த்தாள் வாணி.

கிஷோர் அப்படியே ஏறக்குறைய பரவச நிலைய அடைந்துவிட்டான் என்றுதான் சொல்லவேண்டும் வாயெல்லாம் பல்லாக அவளைப் பார்த்து இளியோ இளி என இளித்தான்? என்னால் நம்பவே முடியவில்லையே...! உனக்காக பெரிய தாஜ்மஹாலை கட்டகூட தயாராய் இருக்கிறேன். ஆப்டர் ஆல்... இந்த சிகரெட்டை விட்டு விட்டு ஒரு பொறுப்பான வேலையைத் தேடிக்கொள்ள முடியாதா? ஒரே.. ஒரு வாரம்.... டயம் கொடு... நான் எப்படி மாறிக் காட்டுகிறேன்... பார்..!

என மேலும் கிழும் ஆனந்தத்தில் குதிக்காத குறையாய் கூளுரைத்தான் கிஷோர்.

வாணியும் அதை வியப்பாய் பார்த்தவள் அந்த விஷயத்தை அத்தோடு விட்டு விட்டாள்.

ஆனால் அந்த ஒரே வாரத்தில் பெரும் அதிசயம்தான் நடந்தது. சொன்னது போலவே கிஷோர் அடியோடுதான் மாறிவிட்டான். மூன்றே நாளில் ஒரு தனியார் கம்பெனியில் குமாஸ்தா வேலை ஒன்றில் சேர்ந்து கொண்டான். சிகரெட்டை அடியோடு நிறுத்தி, தலை முடியை எல்லாம் கிராப் வெட்டி, நீட்டான பேண்ட் ஷர்ட்டுடன் அசடு வழியாத அமைதியான புன்னகையுடன் அவள் முன் கிஷோர் தோன்றியதைப் பார்த்து வாணியே ஒரு கணம் அசந்து விட்டாள்.

அவளால் கொஞ்சமும் நம்ப முடியவில்லை.

உலக அதிசயமாகவே அவனைப் பார்த்தாள்!

மறுநாள் அதேபோல் உலக அதிசயமாய் வேறொரு விஷயமும் அவள் வாழ்க்கையில் நடந்தது.

அது...

அதுவரை பாராமுகமாய் ஓடி ஒளிந்து கொண்டிருந்த அலுவலக மேனேஜர் உதயசந்திரன் திடும்மென நண்பனாய் பேச உருவெடுத்து அவள் முன் வந்து நின்றது...!



# 12

அன்று ஞாயிற்றுக்கிழமை வாணி வழக்கம் போல் பொதுநூலகம் சென்று தேவையா புத்தகங்களை நூலக ஷெல்ஃப்பை குடைந்து எடுத்துக் கொண்டாள். அவ்வளவுமே சமையல் குறிப்பு மற்றும் விதவிதமான உணவு தயாரிக்கும் புத்தகங்கள்.

எடுத்து விட்டு வழியில் இருக்கும் சிறுவர் பூங்கா பக்கம் காலாற நடந்து வந்தாள். அந்தப் பூங்காவின் மரப்பெஞ்சில் உட்கார்ந்து சிறுசிறு வாண்டுகளின் மழலைக் குரலை சேஷ்டைகளை கவனித்தபடி ரஸிப்பது அவளுக்கு பிடித்தமான விஷயம்.

அன்றும் அப்படி ஒரு பத்து பதினைந்து நிமிடம் உட்கார்ந்து விட்டுப் போவோம் என்றபடி பூங்காவினுள் நுழைந்து ஓரமான பெஞ்ச் ஒன்றில் அமர்ந்தாள்.

கண்களை விரித்தபடி சற்றுத் தள்ளி துள்ளித்திரியும் வாண்டுகளின் சேஷ்டைகளில் அவள் லயிக்கப் போனபோது, "க்க்கும்ம்... என பழகிய இணைப்புச் சத்தம் ஒன்று கேட்க திடுக்கிட்டுத் தான் போனாள்."

திரும்பினால்... பக்கத்தில் உதயசந்திரன்!

கைகளை கட்டியபடி நின்று கொண்டு, புன்னகையுடன் அவளையே பார்த்துக்கொண்டு.

அவளால் கொஞ்சமும் நம்பமுடியவில்லை...!

என்ன இவனா...? அதுவும் அவளைப் பார்க்கவா? ஒரு வாரமாய் முகத்தில் விழிக்காமல் ஓடி ஒளிந்தவனுக்கு திடீரென எப்படி தைரியம் வந்தது?

இவன்... எப்போது வந்தான்? உள்ளை நுழையும்போது கூட அவள் கவனிக்க வில்லையே..? எதற்காக என்ன காரணத்திற்காக... இப்போது வந்திருக்கிறான்?

அவள் திகைக்க... "அவளுக்கு புரிய வைக்கும் விதமாய் எதிரே இருக்கும் ஷாப்பிங் கிளாஸூக்கு வந்தேன். தற்செயலாய் நீ பூங்காவில் நுழைவதைப் பார்த்ததும் பின் தொடர்ந்து உன்னிடம் பேச வந்து விட்டேன்... என்றான் நேரிடையாய் விஷயத்திற்கு வந்தவனாய்"

என்னிடம் பேசவா?



கேட்ட வாணியின் குரல் லேசாய் தடுமாறியது பழையபடி முருங்கை மரம் ஏறிய கதையாய் இவன் காதல் பேச்சு பேச வந்து விட்டானா? என அவளுள் வியப்பும் கூடியது.

உட்காரலாமா? என அமைதியாய் அவளிடம் அனுமதி கேட்டபடி அவள் அருகே அமர்ந்தான் அவன்.

ஜீன்ஸ் பாண்டும் டீ ஷர்ட்டுமாய் அவனைப் பார்க்கும் போது வாணிக்கு முன்பில்லாத இறுக்கமான தோற்றம் அவன் முகத்தில் கண்களில் ஓட ஒருவித அழுத்தமான கண்டிப்பு என எதுவும் இல்லாமல் இலகுவான அவனது புன்னகை தோற்றமே எதிரொலித்தது.

அவன் என்ன பேசப் போகிறான்? என அவள் புருவம் உயர சிந்தித்தபோதே, இன்று நல்ல விஷயங்களையே பேசப்போகிறேன் வாணி.... என முன்னுரையும் கொடுத்தான் அவன்.

"நல்ல விஷயங்களா?"

"பெரிதாய் தலையாட்டினான் அவன்."

"ம்ம்... ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது கூட நல்ல விஷயம்தான்"

"அவள் திகைத்தாள்."

சரிதான். இவன் திருந்தவில்லையா? மறுபடியும் ரோமியோ டயலாக் எடுத்து விடப் போகிறநானா? இவ்வளவு சூடுபட்டும் அவனுக்கு புத்தியில் உரைக்கவில்லையா?

அவள் மனதுள் எழும்பிய கேள்விகளுக்கு ஏற்பவே அவனது பதிலும் அமைந்தது. தொடர்ந்து பேச ஆரமபித்தவன், இப்போதுதான் எனக்கு புத்தியில் உரைத்தது வாணி. நான் அப்படித் தொடர்ந்து வந்து உனக்கு தொந்திரவு கொடுத்டதிருக்கக் கூடாது. லேசாக என் விருப்பத்தைச் சொல்லி கேட்டிருக்கவேண்டும். விருப்பமில்லை என்றவுடன் விலகியிருக்க வேண்டும். அதைவிட்டு விட்டு கொஞ்சம் சில்லறைத்தமனமாய் நடந்து கொண்டதாய் யோசித்து பார்த்தபோது எனக்கே தோன்றியது. "ஐ... ஆம்... வெரி... ஸாரி... ரியலி ஸாரி... வாணி...!"

படபடவென அவன் பேசி முடிக்க அவள் அதிர்ந்துதான் போனாள். என்னவோ ஏதோ சொல்லப் போகிறான்.. என்று பயந்தால் பாவமன்னிப்பு அல்லவா கேட்கிறான்? இவனை தவறாக நினைத்து விட்டோமே.. நாம் நினைத்ததுபோல் அன்று மிரட்டலாய் நாம் சொன்ன வார்த்தைகளை இவனை ரொம்பவும் காயப்படுத்தியிருக்கவேண்டும்.

திகைத்தவள் தலையைச் சிலுப்பியபடி சற்று சங்கடமாகவே அவனைப் பார்த்தாள். "அதை மறந்து விடுங்கள்...!" என்றாள். மறந்து

விடத்தான் இப்போது வந்திருக்கிறேன்... என அவன் சொன்னபோது வியப்பு கூடி ஆச்சரியத்தில் அவளுக்கு விழி விரிந்தது.

அவன் உதயசந்திரனின் குரலோ மேலும் தணிந்தது.

"வாணி, நான் சொல்லவந்தது... இப்போதைய நாம்... நான்... நடந்து கொள்ளும் சூழ்நிலை.. நீ அப்படி மறுத்து முகத்திலடித்தாற்போல் சொன்னதும் நான் ரோஷத்துடன் என் வேலைப் பிரிவை மாற்றி வேறு செக்ஷனுக்கு சென்றதும் உன் முகத்திலே விழிக்க எரிச்சலடைபவன் போல் நடந்து கொள்வதும்... என ஒருவாரம் நான் நடந்து கொண்டதை நினைத்தால்... எனக்கே வெட்கமாய் அவமானமாய்த் தோன்றியது.. எதற்காக இப்படி மூஞ்சைத்தூக்கி.. கொண்டு நடமாட வேண்டும்? என்றே கேள்வி என்னை பெரிதும் ஆட்டியது... அதனால்... அதனால்...நன்றாக யோசித்தேன். யோசித்து ஒரு முடிவிற்கு வந்தேன். நீ சொன்ன விஷயத்தை ஸ்போர்ட்டிவா எடுத்துக் கொண்டால் என்ன? தொடர்ந்து நாம் நல்ல நண்பர்களாய் இருந்தால் என்ன...?"

இயல்பாக பேசி இறுக்கமில்லாமல் உதடுகள் விரிய அவன் பளீர் புன்னகையை காட்டியபோது வாணிக்கும் கொண்டிருந்த சங்கடம், இறுக்கம் முற்றிலும் தளர்ந்தது. இலகுவானவளாய் அவளும் கலகலநகைப்பை உதிரவிட்டாள்.

அதை ஓரிரு வினாடி உற்றுப் பார்த்த... உதயசந்திரன், ஆனாலும் இப்படியொரு முத்துப்புன்னகை புரிபவளைப் போய் அநியாயமாய் விரோதி போல் நினைக்க இருந்தேனே...? ம்ஹூம் ... அது என்னால் முடியாத காரியமே...! என்றான் கைகளை விரித்தவாறு.

அவன் தன் சிரிப்பழகை ரஸித்ததை விட சொன்ன வாக்கியத்தில் எதோ குத்துவது போல் உணர்ந்தவள், என்ன விரோதியாய் என்னை நினைத்தீர்களா? என்றாள் ஆவலோடு.

அவளை தெளிவுபடுத்துபவன் போல் தலையை வேகமாய் மறுப்புடன் ஆட்டியவன், அப்படி நினைத்திருந்தால் இப்போது உன்னைத் தேடி வந்திருப்பேனா? என்றான்.

பின் அவனே விடாது, "வாணி இரண்டு மூன்று நாள் நன்கு யோசித்துப் பார்த்தேன். நான் என் விருப்பத்தைச் சொன்னேன். நீ உன் கருத்தைச் சொன்னாய், அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதானே என் பொறுப்பு? அதைவிட்டுவிட்டு சிறுபிள்ளை போல் கோபித்துக்கொண்டு ஓடி ஒளிவதால் என்ன லாபம்? மனதில் வன்மமும், உன்மேல் அளவு கடந்த எரிச்சலும் தானே தினம் தினம் எழுந்து எனக்குள் தலைவிரித்து ஆடும்..? இது தேவையா? இதற்குப் பதில் உண்மையை ஏற்றுக்கொண்டு.... ஒருவரையொருவர் வெறுக்காமல் புரிந்து கொண்டு நல்ல நண்பர்களாய்



இருக்கலாமே... அது... தப்பில்லைதானே?... என்ன ... என்ன... சொல்கிறாய்...? என்ன....நீ... நினைக்கிறாய்? என்றான் விளக்கம் சொல்வது போல் ஆரம்பித்து கேள்வியில் முடித்தவனாய்."

வாணிக்கு ஒருகணம் என்ன பேசவதென்றே தெரியவில்லை. கண் இமைக்காமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள், என்ன ஒரு மாற்றம் இவனிடம்? செருப்படிகள் விழும்... என எச்சரித்ததும் அவன் முகம் போன போக்கு? அதற்குப்பின் ஓரிரு முறை பார்க்க நேர்ந்தபோதும் எதிரியைக் கண்டதுபோல் அவன் முகத்தை வெட்டிய விதம்...? எல்லாவற்றையும் அடியோடு மறந்துவிட்டு சமாதானக் கொடியை பிடித்து விட்டானே?

"இனி... நாமும் இறங்கித்தானே வேண்டும்? என நினைத்தவள், அன்று அப்படி நான் கடுமையாக பேசியது தவறுதான். ஸாரி... என்றாள் மென்மைக்குரலில்."

அவனும் அதே வேகத்தில் குறுக்கிட்டவன், "ஸாரி... தேவையில்லை வாணி. அன்று அப்படி உன்னை பேச வைத்தது... நான்... எனது நடவடிக்கை... ! அப்படி ரோமியோத்தனமாய் விடலைபோல் நடந்து கொண்டால்... யாருக்குத்தான் கோபம் வராது? அதுவும் உன்னைப் போன்ற அழகான பெண்ணுக்கு....? என்று முடிக்க அவள் புதிராய் அதிரவே செய்தாள்."

இது.. என்ன... வஞ்சிப்புகழ்ச்சி? இவன் நிஜமாக என்னதான் பேசுகிறான்? என்னதான் சொல்லவருகிறான்?

அவளைமேலும் சிந்திக்க விடாதவன் போல் அவன் நிமிர்ந்து தலையை உயர்தியவன் அதைச் செய்தான். இன்று முதல் நல்ல நட்புக்கு அடையாளமாய்.... இது.... என்றபடி புன்னகைவிரிய சட்டெனதன் கையை நீட்டினான்.

வாணிக்கு வேறு வழி தோன்றவில்லை.

நீட்டிய அவன் கரங்களின் மீது தன் கையை மெல்ல வைத்தாள்.

இறுக்கத்தோடு பற்றி குலுக்கினான் அவன்.

...



# 13

பத்து நாட்களுக்குப் பிறகு வாணி இயல்பான உற்சாகத்துடன் அலுவலகம் செல்ல ஆரம்பித்திருந்தாள்.

முன்பு போல் உதயசந்திரன் எதிரில் வந்து விடுவானா, அவன் முகத்தில் முழிக்க வேண்டியிருக்குமோ என்றெல்லாம் சங்கடமாய் சங்கோஜப்படுவதற்கு அவசியமில்லாமல் இருந்தது.

அன்றைய பூங்கா கைகுலுக்கலுக்குப் பிறகு நிறைய மாற்றம் ஏற்பட்டிருந்தது. உதயசந்திரன் முதல் வேலையாய் அவள் பிரிவிற்கே மாற்றலாகி வந்து மேனஜர் பொறுப்பை ஏற்றுக்கொண்டான். முன்பு போல் வழியாமல் ஸ்னேகமான சிரிப்பு மற்ற பணியாளர்களிடம் பேசுவதுபோல இயல்பான பேச்சையும் அவளிடம் பேச வாணிக்கு அது ரொம்பவும் இலகுவாயிற்று.

எந்தவொரு சங்கோஜமின்றி இருவரும் சந்தித்தார்கள். வேறு விஷயங்களைத் தொடாமல் வேலையைப் பற்றி உற்பத்தி பிரிவில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றி மணிக்கணக்கில் பேசினார்கள். அவள் யோசித்து வந்து சொல்லும் புதுப்புது ஐடியாக்களை ஆர்வமாய்க் கேட்டான் உதயசந்திரன் சில ஐடியாக்கள் சிறப்பாக இருப்பதைக் கண்டு, மிகப் பிரமாதம்! இப்படியெல்லாம் உன்னால் சிந்திக்க முடியுமா...! என கைகளைத் தட்டி ஆர்ப்பரித்தான்.

அப்படித்தான் அன்றும் அவள் சொன்ன ஒரு புதுஐடியாவிற்காக அவன் வெகுவாய் பாராட்டி கைகளைத் தட்ட அவள் உச்சி குளிர்ந்துதான் போனாள்.

அவன் காலையில் புகழ்ந்து கொடுத்த அந்த பாராட்டுப் பத்திரம் இரவுவரை அவளை தூங்க விடாமல் இம்சித்தது. பளீரும் புன்னகையுடன் காந்தக் கண்கள் மின்ன அவன் சொன்ன காட்சி அவவனது உருவம் அடிக்கடி தேவையில்லாமல் தன் மூளையில் தோன்றி மறைவதை தூங்க விடாமல் தன்னை இம்சிப்பதை முதல் முறையாய் கொஞ்சம் அதிர்வாகவே உணர்ந்தாள் அவள்.

மறுநாளும் அதேபோல் யுனியன் மீட்டிங் ஒன்றியல் கலந்துவிட்டு இருவரும் திரும்ப வேண்டியிருந்தது. களைப்பை உணர்ந்து வழியில் இருந்த காபி ஷாப் ஒன்றில் காரை நிறுத்திடினான் உதயசந்திரன் அவளும் இறங்கினாள்.

"கட்லட், காபி என ஆர்டர் செய்து சிற்றுண்டியை முடிக்கும் சமயமாய் அவளை ஆழமாய்ப் பார்த்த உதயசந்திரன், வாணி, இது என்ன புது டிசைன்... மயில் தோகை வண்ணத்தில்..... நீலமும்... இளம் பச்சையுமாய்? இந்த சேலை பிரமாதம்! அதைவிட நளினமாய் அதை கட்டிக்கொண்டு ஜொலிக்கும் தேவதையாய் நீ உட்கார்ந்திருப்பது மிகப் பிரமாதம்..! எநன்று அவன் சொன்ன போது புகழ்ச்சியில் கிறுகிறுத்து தலையை அவள் தாங்கித்தான் பிடிக்க வேண்டியிருந்தது.



"கன்னக்கறுப்புகள் சூடாய் சிவப்போறுவதை உணர்ந்தவள் அதை மறைக்கும் விதமாய் பளீரென சிரித்து, எல்லாம்... என் அண்ணி வாங்கிக் கொடுத்தது. அவர்களது செல்ஷன்தான் இது...! என்றாள் பெருமிதம் பொங்க..."

"அண்ணியா..? யார் அது? என்றான் உதயசந்திரன் அப்பாவியாய்..."

அட.. அண்ணி... என்றால் தெரியாது? என் ஒரே அண்ணன் சுரேசனின் மனைவி... மிக நல்லவர்கள்... என் மீது அளவுகடந்த பிரியம் வைத்திருப்பவர்கள்... என்னை அப்படியே அன்பு, பாசம், கருணை என என்னவெல்லாம் உண்டோ... அவனை அனைத்திலும் முழ்கடித்து... என்னை நிறைடித்துவிடுபவர்கள்.... என் அன்புக்குரிய அண்ணி மாலினி!.. என அவள் பெரும் உற்சாகக் குரலில் ஆரம்பித்து முடிக்க அவள் குரலில் தொனித்த பெருமிதத்தையும் சந்தோஷத்தையும் கண்டு திகைக்கவே செய்தான் உதயசந்திரன்.

"அப்படியா... நிஜமாவா...?"

அவன் மறுபடியும் அப்படி ஒரு கேள்வியைக் கேட்டதும்தான் தாமதம் மடை திறந்தாற்போல் அப்படியே அண்ணி புராணம் பாட ஆரம்பித்து விட்டாள் வாணி.

தன்னை அளவு கடந்த பாசக்கடலில் தினம்தினம் குளிக்கித்து மகிழும் அண்ணியைப் பற்றி யாராவது கேட்க மாட்டார்களா என்று நினைத்தவளுக்கு உதயசந்திரன் இப்படிக் கேட்டதும், அகப்பட்டது ஆள்.. விடாதே! உளறிக்கொட்டு! என்பது போல் ஒரு அரை மணி நேரம் மூச்சு விடாமல் பேசி முடித்தாள்.

முடித்ததும் நிஜமாகவே அவளுள் மூச்சு வாங்கியது. உதயசந்திரனுக்கு அவள் சொன்ன அண்ணி புராணத்தைவிட சிறு குழந்தை போல் குதூகலித்து சொல்லும் அவள் அம்மா, அண்ணன், அண்ணி என ஒவ்வொருவராய் விளித்து அவர்களது குணாதிசயங்களை பட்டியல் போட்டு வீட்டில் தங்கத்தட்டில் வைத்து தன்னைத்தாங்குவதைப் போல் இருக்கும் தன் பாசமான அன்புச் சூழ்நிலையை முழுவதுமாய் விவரித்தபோது... உதயசந்திரன் நிஜமாகவே திகைத்துதான் போனான்.

"மனதில் சட்டென ஓடிய அந்த நினைப்பை அடக்க முடியாதவனாய் அவனும் உளறிக் கொட்டுபவன் போல், இப்போது புரிகிறதா வாணி, இது போன்ற அன்புச் சூழ்நிலையை விட்டு வெளிவரயாருக்குத்தான் மனம் வரும்? உண்மைதான் நீ எனது காதலை நிராகரித்ததும் நியாயம் தான்! என்றான் தெளிவான குரலில்."



# 14

அவன் சொன்னது காதுகளில் உரைத்தாலும் அதையெல்லாம் முழுதும் வாங்காதவள் போல் பெருமிதமான சிரிப்பொன்றை சிரித்துக்கொண்டிருந்தாள் அவள்.

அவளையே உற்றுக் கவனித்த உதயசந்திரனின் முகத்திலும் மெலிதான குறுநகை ஒன்று படர ஆரம்பித்தது.

கிஷோர் அடியோடு தன் சுபாவத்தை மாற்றி நல்ல பிள்ளையாய் ஆகிவிட்டான். மாலினிக்கோ அவன் பொறுப்பாய் நடந்து கொள்வதையும் அடக்கமும் பணிவுமாய் நடமாடுவதையும் கண்டு பயங்கர ஆச்சரியம்!

என்ன இது கூத்து... எப்படி இவன் மாறினான்? என அவள் வாய் பிளக்க, எல்லாவற்றுக்கும் காரணம் நான்தான்! என்றாள் வாணி அமைதியாக.

"என்ன வாணிக்கண்ணு சொல்கிறாய்?"

"மாலினி திடுக்கிட அவ்வளவையும் விவரித்தாள் வாணி."

"ஐயையோ...! மோசம் போய் விட பார்க்கிறாயே... கண்ணு? என ஒரேடியாய் பதறித்தான் போனாள் மாலினி."

"மோசமா...? என்ன சொல்கிறீர்கள் அண்ணி? கிஷோர் திருந்தினால் நல்லதுதானே?"

"நல்லதுதான் அதற்காக?"

"அதற்காக...?"

"அதற்காக அவனை... உனக்கு வாழ்க்கைத் துணையாய் தேர்ந்தெடுக்கும் அளவுக்க போய்விடுவதா? உன் அறவிற்கும் அழகுக்கும் நான் டாக்டர், எஞ்சினியர் என பெரிய லிஸ்ட் ஒன்றையே வைத்திருக்கிறேன்."

"நீ என்ன வென்றால்..."

"இருக்கட்டும் மன்னி... அந்த லிஸ்ட்டில் உங்கள் தம்பி கிஷோரையும் சேர்த்துக் கொள்ளுங்கள்...."

"ம்ஹூம்...! அவன் ஒருபோதும் சரிப்பட மாட்டான்... அவனை விட்டு விடு வாணிக்கண்ணு...."

"ஏன்... மன்னி... கிஷோர்.... மாறி வருவது கண்கூடாக தெரிகிறதே...?"

"ம்ம்... மாறட்டும். அதையும் பார்க்கலாம்... ஆனால்..."



"மாலினி இழுக்க, சொல்லுங்கள்... என்றாள் வாணி ஆவலாய்."

"எனக்கென்னவோ ஒரு விஷயம் நெருடலாய் சந்தேகமாயும் இருக்கிறது...."

"அது என்ன விஷயம் மன்னி?"

இந்த மாற்றம் நிரந்தரம்தானா... அல்லது வெறும் நடிப்பா.. என்று...

"நீங்கள் கிஷோர் நடிப்பதாக சந்தேகப்படுகிறீர்களா?"

"வாணி மறுபடியும் ஆவலாய் கேட்க அதற்கு பலமாய் தலையாட்டினாள் மாலினி."

"என் அன்புத் தம்பியைப் பற்றி அன்பு அக்காவான எனக்குத் தெரியாதா?"

"வாணி சிரித்தபடி சொல்லி முகத்தை வெட்ட, ம்ம்... நல்ல அக்கா.. நல்ல தம்பி! என வாணியும் சிரிக்க ஆரம்பித்தாள்."

"வாணி அத்தோடு விஷயத்தை விட்டு விடவில்லை. அன்றே அலுவலக இடைவேளையில் உதயசந்திரனிடமும் விஷயத்தை போட்டு உடைத்தாள்."

"உதயசந்திரன், ஒரு மகிழ்ச்சியான செய்தி... என்று அவள் உற்சாகமாய் ஆரம்பிக்க புரியாமல் விழிக்கத்தான் செய்தான் அவன்."

"நான் நினைத்தது... நினைப்பது போல் எல்லாம் நடந்து விடும் போல் இருக்கிறது.... என்றார் அடுத்து பீடிகையாய்."

"என்ன விஷயம் வாணி... நீ இவ்வளவு சந்தோஷம் கொள்ளும் அளவுக்கு என்ன நடந்தது? என்றான் வியப்பு விலகாமல்."

வாணி கிஷோர் பற்றி விஷயங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் ஒப்புவித்தாள்.... கிஷோர் தன் நினைப்புப்படி மாறி வருவதாகவும் அப்படி அவன் முழுவதுமாய் மாறிவிட்டால்.... அவனை அப்படியே தன் வாழ்க்கைத்துணையாய் வீட்டோடு மாப்பிள்ளையாக்கி.... தனது வீட்டு அன்புச்சூழ்நிலையை தான் பிரிய வேண்டிய இருக்க வேண்டிய கட்டாயம் இல்லாமல் செய்து விடலாம்தானே? அதனால்தான் இப்படி ஒரு பிளான் செய்து நிறைவேற்றி வருகிறேன்...!

"வாணி பெருமிதம் பொங்கச் சொல்ல நிமிடங்களுக்கு உதயசந்திரன் முகத்தில் சலனமில்லை."

"அப்படியே உணர்ச்சியற்றவன் போல் ஓரிரு நிமிடங்கள் உட்கார்ந்திருந்தான்."

"நண்பரே.. என்னாயிற்று.. நண்பரே...? திடீரென ஏன் இப்படி மௌனமாகி விட்டீர்கள்?"

வாணியின் குரல் அப்படி உலுக்கியபோதுதான் மறுபடி நினைவுக்கு வந்தான் உதயசந்திரன். அவள் நண்பரே.. என ஒருவிதமாய் புதுஸாய் விளித்து அழைத்தது அவனை இன்னும் திடுக்கிடச்செய்தது.

"என்ன சொல்லி அழைத்தாய்... நண்பரே... என்றா?"

"பலமாய் குதூகலத்துடன் தலையாட்டினாள் வாணி."

"ஆமாம் நண்பரே... இப்போது நான் மிக சந்தோஷமாக மகிழ்ச்சி பொங்க இருக்கிறேன். எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய கேள்விக்கு ஒரு நல்ல வழி கிடைத்தது. அதுபோல் இங்கு அலுவலகத்தில் பேசிப்பழக உங்களைப் போல ஒரு நல்ல நண்பரும் கிடைத்தாயிற்று. அதனாலே அந்த நினைப்பிலேயே பெரும் மகிழ்ச்சியும் எனக்கு உண்டாகுகிறது. என்ன நான் சொல்வது சரிதானே?"

"உற்சாகமாய் பெரிதும் தலையாட்டியபடி"

"அவள் கேட்க உதயசந்திரனின் தலையும் தானாக ஆடியது."

"அதனால் இனி இப்போதும் உங்களை நண்பரே "

"நண்பரே... என அன்பொழுக அழைக்கப்போகிறேன்.. சரியா நண்பரே...?"

அவள் விளையாடுகிறாளோ என்று எண்ணியவனுக்கு அவள் வாணி மறுபடியும் சீரியஸாகவே கேட்க பலியாடு போலவே தலையாட்டினான் அவன்.

கூடவே நிமிர்ந்து அவளை உற்றுப் பார்த்தான்.

"வாணி... எனக்கொரு சந்தேகம்...."

"கேளுங்கள் நண்பரே...."

படு உற்சாகம் கொள்பவனாய் அவள் மறுபடியும் தலையாட்ட உதயசந்திரனுக்கு எரிச்சலே வந்தது. அடக்கிக் கொண்டு அவளைப் பார்த்தவன், "அந்தக் கிஷோரை... நிஜமாக உனக்குப் பிடித்திருக்கிறதா... அல்லது சூழ்நிலைக்காக விரும்புகிறாயா?" அவன் கேட்க அதற்கும் வாணி, எதுவாக, எப்படியாக இருந்தாலும் என்ன நண்பரே...? அவர்தான் வீட்டோடு மாப்பிள்ளையாய் எனது அன்புச் சூழல் கெடாமல் என்னைப் பார்த்துக் கொள்வார் என என்மனதிற்கு படுகிறது என்ன சரிதானே? என எதிர்கேள்வி அவள் கேட்கவும் அப்படியே மௌனமாகி விட்டான் உதயசந்திரன்.

பின் சற்று நேரத்தில் வாணி எழுந்து கொண்டவள், "சரி... வருகிறேன் நண்பரே..." எனவும் விடைபெற்று கிளம்பிவிட்டாள். அவள் போய் ரொம்ப நேரமாகியும் இருக்கையிலேயே எழும்பாமல் அப்படியே கற்சிலைபோல் அமர்ந்திருந்தான் உதயசந்திரன் அதை தற்செயலாய் திரும்பிப் பார்த்த வாணியின் விரிந்த மைவிழிகளும் உற்று கவனித்தது.





# 15

மறுவாரம் முழுவதும் வாணி சும்மா இருக்கவில்லை. தனது திட்டத்தை செயல்படுத்துவதிலேயே குறியாகிவிட்டாள்.

அவளுள் எழும் முதல் கேள்வி கிஷோருடன் தன்னால் ஒத்துப்போக முடியுமா? தனது விருப்பு வெறுப்பு எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அவன் நடந்து கொள்வானா? என்றுதான்.

ஆனால் கிஷோரோ எதற்கெடுத்தாலும் சலாம் அடிக்காத குறையாகத்தான் பணிந்தான். "எஸ்... பாஸ்...! சொல்லுங்கள் பாஸ்...." என அவளது ஆணைக்கு காத்திருப்பவன் போல் விளித்துப்பேச அவளுக்கு சிரிப்புதான் பொத்துக்கொண்டு வந்தது.

சிலசமயங்களில் அதிலும் ஒருபடி மேலே போய், "வாணி மேடம்... சொல்லுங்கள் மேடம்..! என பணிவு காட்டினான். அதையெல்லாம் கவனித்த மாலினியேபு, ஐஸோ.. ஐஸ்! இதையெல்லாம் நம்பி விடாதே வாணி...! என எச்சரித்தாள்."

வாணியும் வேலைமுடிந்த மாலை நேரங்களில் வெள்ளோட்டம் பார்ப்பது போல் தினம் ஒவ்வொரு இடங்களுக்கு அவனுடன் கிளம்பினாள்.

முதலில் பார்க், அப்புறம் நூலகம், அப்புறம் ஒருநாள் ஹோட்டல், கடைசியாய் காம்ப்ளெக்ஸ் தியேட்டர் ஒன்றுக்கு என வரிசையாய் கிஷோருடன் கிளம்பிவிட்டாள்.

கிஷோருக்கோ முகம் வெடித்து விடும் அளவுக்கு சந்தோஷம், புளகாங்கிதம் அடைந்தவனாய் அவளுடன் ஆனந்தநடை போட்டான். அன்று அப்படிந்தான் காம்ப்ளெக்ஸ் தியேட்டரில் படம் பார்க்க பச்சையில் வண்ண சுரிதாரில் வாணி கிளம்பிவிட்டாள்.

உடம்போடு ஒட்டிய அந்த சுரிதாரில் நிஜமாகவே தங்க நிற தேவதையாய் ஜொலிக்கத்தான் செய்தாள் அவள். வாய் பிளக்க அவள் அழகைப் பருகியபடி கிஷோர் அசட்டு நடைதான் போட்டுக்கொண்டிருந்தான்.

ஆகா.. இந்த டிரஸ் பிரமாதம்! சூப்பரோ... சூப்பர்... என வீட்டில் கிளம்பும் போது ஆரம்பித்த புகழ்ச்சி பேச்சை தியேட்டர் வாசல் வரை விடாமல் தொடர்ந்தான். வாணிக்கே என்ன இது இப்படி அறுஅறுக்கிறானே? என சலிடித்துவிட்டாள்.

தியேட்டரின் முன் வந்ததும் தான் அது புதுப்படம் டிக்கெட்டுகள் கிடைப்பது கஷ்டம் என புரிந்தது... இருவரும் புரியாமல் விழிக்க...

"எக்ஸ்கியூஸ்மி..." என்ற இணைப்புச் சப்தத்துடன் பழகிய குரல் ஒன்று கேட்க வாணி திடுக்கிட்டுத் திரும்பினாள்

எவ்வித சலனமுமில்லாமல் அங்கு அமைதியான சிரிப்புடன் உதயசந்திரன்.

என்ன டிக்கெட்டுகள் கிடைக்கவில்லையா? என அவன் பேசி வார்த்தைகளை முடிப்பதற்குள் கிஷோர் அவசரமாய், உங்களிடம் டிக்கெட்டுகள் இருக்கிறதா? என்றான் படபடப்பாய்

உதயசந்திரன் அதற்கு பதில் சொல்லமால் நேராய் வாணியைப் பார்த்தவன், "இது.. நீ.. நீங்கள்... சொன்... மன்னியின் சகோதரர் கி... கிஷோர்... தானே? என்றான்."

வாணி தலையசைப்பதற்குள் கிஷோர் மறுபடியும் முந்திரிக்கொட்டையாய், "யெஸ்...! என பெரிதாய் தலையை குலுக்கி கைகளை நீட்டினான் அவன்."

உதயசந்திரன் அவன் கைகளைப் பிடித்து குலுக்கியவன் இதழ் முழுவதும் புன்னகையை பரவ விட்டவாறு, கன்கிராஜுலேஷன்ஸ்... அட்வான்ஸ் வாழ்த்துக்கள்! என்றான்.

என்ன அட்வான்ஸ் வாழ்த்துக்களா... எதற்கு? என்றான் கிஷோர் புரியாமல்.

வாணிக்கும் ஒரு கணம் புரியவில்லைதான்.

ஆனால் உதயசந்திரன் சொன்ன பதிலைக் கேட்டதும் அவளது முகத்தில் அவளையறியாமலே மகிழ்ச்சி குன்றத்தான் செய்தது.

என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்.... விரைவில் வாணியின் கரம் பிடிக்க இருக்கிறீர்களாமே.... அதற்குத்தான் இந்த அட்வான்ஸ் வாழ்த்துக்கள்... ! என அவன் விளக்க... கேட்க கிஷோர் துள்ளிக் குதிக்காத குறைதான்!

அட... அதற்குள் வாணி விஷயத்தை தம்பட்டம் அடித்து விட்டாளா? வெகு ஜோர்தான்! என பெருஞ்சிரிப்புடன் பேசிய கிஷோர் அப்படியே வாணியின் பக்கம் திரும்பி, இந்த மன்னவனை உன் மணாளனாய் ஏற்றுக் கொள்ள முடிவெடுத்ததற்கு வெரி.. வெரி... தாங்க்ஸ்... ! என குனிந்து சலாம் வேறு அடித்தான்.

அத்தனை, கூட்டத்தின் மத்தியில், தம்பட்டம் ஜோர்... என்றெல்லாம் உளறி அவன் குனிந்து சலாம் ஒன்று அடிக்கவும் கடந்து சென்ற கூட்டத்தின் ஒரு பகுதியினர் வினோதமாய் அவர்களைப் பார்த்து முணுமணுத்தபடி கடந்தனர் அவமானத்தில் தான் நெளிந்தாள் வாணி.

அவள் கிஷோரின் நடவடிக்கைகளில் தவிப்பதை ஓரக்கண்ணால் கவனித்துவிட்ட உதயசந்திரன், நான் உதயசந்திரன் வாணியின் அலுவலக



மேனஜர். "என்னிடம் இரண்டு டிக்கெட்டுகள் நண்பருக்காக வாங்கியது இருக்கிறது. சென்று வருகிறீர்களா?" என்றான் நேரிடையாய் விஷயத்திற்கு வந்தவனாய் கிஷோரைப் பார்த்தவாறு.

அவன் சொன்னதும் கிஷோர் கொஞ்சமும் யோசிக்கவில்லை. டக்கென அவன் கைகளில் வைத்திருந்த இரண்டு டிக்கெட்டுகளை பிடுங்கியே விட்டான். "ரொம்பவும் தாங்க்ஸ் ஸார்... எங்கே... வாணியுடன் படம்பார்க்க முடியாமல் போய் விடுமோ என்றுதான் பயந்து கொண்டிருந்தேன். நல்லவேளை... தெய்வம் போல் வந்து டிக்கெட்டுகளை கொடுத்திருக்கிறீர்கள்... வெரி தாங்க்ஸ்..."

மறுபடியும் பலத்த தலையாட்டலுடன் கிஷோர் உடம்பே ஆடும்படி சொன்னான்.

அட... கொஞ்சமாவது இங்கிதம் வேண்டாம்... டிக்கெட்டுகள் வேண்டுமா? என்று கேட்டு முடிப்பதற்குள் கைகளிலிருந்து பிடுங்கி விட்டானே இந்த கிஷோர்? கொஞ்சமாவது தேவையில்லை. நீங்கள் பாருங்கள் என பார்மாலிட்டிக்காகவாது சொல்லியிருக்கலாம். அதைவிட்டுவிட்டு இப்படி... அநாகரிகமாய்... சே...!

வாணி முகம் சுளிக்க... கிஷோர் மேலும் அசிங்கப்படுத்தவனாய், சரி... டிக்கெட்டுகள் வந்தாயிற்று... வா... வாணி... நாம் போகலாம்! என அவள் கைகளைப்பற்றி இழுக்க தெளியத்தான் செய்தான் அவன்.

"இருந்தாலும் சுதாரித்துக்கொண்டு உதயசந்திரனைப் பார்த்தவள், நீங்கள்... நீங்கள் படம் பார்க்கவில்லையா...? உங்களுக்கு... டிக்கெட்... டிக்கெட்...? என தயக்கமாய் இழுத்தாள்."

"அதற்கும் கிஷோர் முந்திரிக்கொட்டையாய், அட... வாணி, சார்தான்... வரவில்லை.. டிக்கெட்டுகள் வேண்டாம்... என்று சொல்லிவிட்டாரே..? நாம் போவோம்! என பரபரத்தான்."

வாணி மேலும் சங்கடப்பட உதயசந்திரன் நிலமையை சமாளிப்பவனாய், அதெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் செல்லுங்கள் பொருத்தமான ஜோடியான நீங்கள் பார்க்கவேண்டியபடம் இது.... என்று பெரும் புன்னகையுடன் சொல்லிமுடித்தான்.

அவன் சொன்னவன், பொருத்தமான ஜோடியில் ஓரவித அழுத்தம் கொடுத்ததை கவனித்து விட்ட வாணிக்கு மேலும் அவமானம்தான்!

அனால் அதையெல்லாம் உணர்வதற்கு கூட சந்தர்ப்பமில்லாமல் கிஷோர் அவளைதரதரவென சினிமா ஹாலுக்கு இழுத்துச்சென்றுவிட்டான். அவர்கள் இருவரும் அப்படி போவதை கைகளைகட்டியபடி கற்சிலை போல் உதயசந்திரன் பார்த்துக்கொண்டிருந்ததும் அவள் கண்களில் உறைத்தது. அவனுக்கு ஒரு நன்றி கூட சொல்லாமல் வந்துவிட்டோமே என தவித்தாள்.

அதனாலே அவளால் படத்தில் லயிக்க முடியவில்லை. உதயசந்திரனைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தாள் அவள்.



# 16

வாணிக்கு இருந்த எரிச்சலில் அன்று படம் முழுவதையும் பார்க்கவில்லை. பாதியிலே தலைவலி வந்தாயிற்று, வீட்டுக்குப் போவோம். என கிஷோரை பிடிவாதமாய் கூட்டி வந்துவிட்டாள்.

அட... என்ன வாணி...? நல்ல படம் உன் அருகாமையில் அதைப் பார்க்க எனக்கு எவ்வளவு சுகமாய் இருக்கிறது தெரியுமா? என்றெல்லாம் கிஷோர் பதவிசாய் பேசிய வார்த்தைகள் அவளுக்கு எரிச்சலையே தந்தது.

உதயசந்திரனிடம் டிக்கெட்டுகளை பிடுங்காத குறையாய் இந்த கிஷோர் வாங்கியதே தவறு... அதில் அந்த டிக்கெட்டுகளுக்கு உரிய பணத்தை அவரிடம் கொடுத்தானா? அல்லது அது பற்றி யோசித்தானா...? அவன்தான் செய்யவில்லை என்றால் அவளாவது யோசித்திருக்க வேண்டுமே?

உதயசந்திரன் இதுபற்றி என்ன நினைப்பான்? டிக்கெட்டு கிடைத்ததும் பணம் தராமல் ஒரு வார்த்தை நன்றிகூட சொல்லாமல் ஓடி விட்டார்களே என்றுதானே எண்ணுவான்.

அந்த தவிப்பில் மறுநாள் அலுவலகத்தில் முதல் வேலையாய் உதயசந்திரனைத் தேடிப் போய் நன்றி சொன்னாள். அவன் அதைக் கொஞ்சமம் காதில் வாங்காதவனாய் புன்னகையுடன், என்ன படம் பிடித்திடிருக்கிறதா? என்றான்.

தலைவலி, பாதியிலே எழுந்து வந்து விட்டேன்... என அவள் கூறியதை உற்று கவனித்தான் அவன்.

ஏனோ.. அவன் முன் மேலும் நின்று அவமானப்படக்கூடாது என்று நினைத்தவள் விறுவிறுவென அங்கிருந்து அகன்றுவிட்டாள். அப்படி அவள் அகலும் போது அவன் தன்னையே ஒருவித விரைப்புடன் பார்த்துக்கொண்டிருப்பதையும் அவளது மைவிழிக் கண்கள் கவனிக்கத்தவறவில்லை.

அன்று மாலை அலுவலகம் விட்டு வந்தவள் மறுபடியும் தீவிர யோசனைக்கு போனாள். தனது முடிவு சரிதானா... இந்தகிஷோர் நம் வாழ்க்கைத் துணையாய் சரிப்பட்டு வருவானா? என்ற யோசனை அவளைக் குடைந்தது.

இப்படி வீணாக நாமே யோசிப்பதற்கு கிஷோரிடமே தெளிவாய் பேசிப்பழகி ஒரு முடிவிற்கு வருவதே சரியென அவளுக்குத் தோனிற்று.



அதனாலே அன்று ஆறுமணி வாக்கில் கிஷோரை அழைத்துக்கொண்டு பக்கத்து கடற்கரை பீச்சுக்கு கிளம்பிவிட்டாள்.

என்ன பீச்சிற்கா? என குதி போடாத குறையாய் கிளம்பி விட்டான் கிஷோர்.

ஆர்ப்பரிக்கும் அலைகளுக்கு இடையே பதியும் குருத்து மணலில் காலாற நடந்து ஒரு மேட்டும் பகுதியை தேர்ந்தெடுத்து உட்கார்ந்தார்கள் அவர்கள். ஆங்காங்கே அவர்களைப் போலவே சில ஜோடிகளும் காற்று வாங்க வந்தர்களும் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

கிஷோர், உங்களிடம நியை மனம் விட்டு பேச வேண்டும்... என அவள் ஆரம்பிக்கும் போதே கிஷோர் காதல் போல் அவளது கைகளை எடுத்து தனது கரங்களோடு கோர்த்துக்கொண்டான்.

அருசையாய் உதற நினைத்தவள், விஷயத்தைப் பேசாமல் முதலிலே அவனை எரிச்சல்படுத்த வேண்டாம் என்று அடக்கிக்கொண்டாள். கிஷோர், உங்களை நம்பி கைப்பிடித்தால் முதலில் பொறுப்பாக நீங்கள் நடந்துகொள்ளவேண்டும். பொறுப்பாக என்றால் நான் நினைக்கிற மாதிரி கொஞ்சம் மேன்மையாக டீஸண்டாக... என அவள் சொற்பொழிவை அழுத்தமாகத்தொடங்கி சொல்லிக்கொண்டிருக்கும் போதே கிஷோர் தனது மற்றொரு குறும்புக்கைகளால் அவளது இடுப்பை வளைத்தான். பெரிய மன்மதன் போல் அவன் முகத்தை தனது முகத்தால் நெருங்க ஆரம்பித்தான்.

தான் சீரியஸாய் பேசுவதை கொஞ்சமும் உணராத அவன் செய்கையையும் நோக்கத்தையும் புரிந்தவள் கைகளை உதறி வேகமாய் தட்டி விட்டாள் கோபமாய்.

முறைப்புடன் அவனைப் பார்த்து, கிஷோர்... உங்களைத்தான்.. இந்த சில்மிஷத்தை கொஞ்சம் நிறுத்துகிறீர்களா? இங்கு நாம் வந்திருப்பது... பேசுவதற்காக.. பேச... மட்டும்தான்! என்றாள் அழுத்தந்திருத்தமான குரலில்.

முகம் சுருங்கியவனாய் கிஷோர் அவள் கோபத்தை கண்டு அரண்டவன், ம்ம்.. பேசு...! என்றான் சுரத்தில்லாமல்

கிஷோர், வாழ்க்கையில் நாம் இணைவதற்கு நிறைய விஷயங்களை புரிந்து கொள்ள வேணடும். மனம் விட்டுப் பேச வேண்டும்.. என அவள் சீரியஸாய் மறுபடியும் அக்கறையாய் காதைத் திருப்பியவன் விரல்களால் அதைக் குடைய ஆரம்பித்தான்.

அவளது செய்கையே அவன் தான் சொன்ன விஷயம் ஒன்றையும் காதில் வாங்கவில்லை. அதில் அக்கரை காட்டவில்லை என வாணிக்கு புரிந்தது

சரி.. பேசித்தான் முடித்தாயிற்று இனியாவது காதலர்கள் போல் இடுப்பை இப்படி பிடிக்கலாம் அல்லவா? என்றபடி கிஷோர் மறுபடி ஆவலாய் அவள் இடையை வளைக்க முனைந்தபோது திடுக்கிடவே செய்தாள் அவள்.

என்ன... மாதிரி குணம் இவனுக்கு? என்ற திகைப்புடன் தட்டி விட்டவள், நேரமாகிவிட்டது, வீட்டிற்குப் போகலாம்... என எழுந்து கொண்டாள்.

கிஷோரும் சலிப்பாய் வழியில்லாமல் எழுந்தான். என்ன.. வாணி... நீ...! என்றபடி முன்னால் வேகமாய் நடந்தவளை எட்டிப் பிடித்து அவளது கரங்களோடு தனது கையை அவசரமாய் கோர்க்கப் போனான். அதையும் வேகமாய் உதறினாள் அவள்.

அவளுக்கு ஒரே கோபம் ஆத்திரம் இவனிடம் பேசி விளக்கமாய் அவனது மனநிலைபற்றித் தெரிந்து கொள்ளலாம் என்று பார்த்தால் அதைத் தவிர மற்றவை எல்லாம் பேசுகிறான்... செய்கிறான்... என்ன மனிதன் இவன்?

அவள் கொதிப்பாய் நினைத்து விறுவிறுவென நடக்கையில் மிகவும் பழகிய அந்த கனைப்புடன் கூடிய சிரிப்புச் சப்தம் கேட்க திகைத்து நின்றாள்.

பின்னால் சிரிப்புடன் நடந்து வந்தபடி உதயசந்திரன்!

உதயசந்திரனை அந்த இடத்தில் பார்த்ததும் வாணியின் முகம் மேலும் தவிப்புக்குத்தான் போயிற்று.

அவளை மேலும் சங்கடத்தில் ஆழ்த்துவது போல் கிஷோரும் வாயைத் திறந்தான்.

அட.... யார்... மேனஜர் சாரா? வணக்கம் சார்...! நானும் வாணியும் காதல் ஜோடிகளாய் கை கோர்த்து காற்று வாங்க வந்தோம்...! என தனது வழக்கமான அஷ்ட கோணல் சிரிப்புடன் வாணியின் கைகளையும் உரிமையாய் பிடித்துக் காட்டினான்.

கூனிக்குறுகி நின்றாள் வாணி.



## 17

"வாணிக்கு பயங்கர எரிச்சல்!"

எதுவெல்லாம் நடக்கக் கூடாது என்று நினைத்தாளோ ... அதுவெல்லாம் நடந்தது. எந்த அவமானம் தான் படக்கூடாது என்று பயந்தாளோ.... அதுவும் நடந்தது.

கிஷோர் தன் வாயால் நடக்காததைக் கூட உளறிக் கொட்டினான்.



பாருங்கள் ஸார்... கடற்கரை பீச்... காதல்கள் சங்கமம் என்று சொல்வார்கள்... அதனால் வந்தோம். காதலர்கள் போல் பேசினோம் பழகினோம்... நெருக்கமாய் நடந்தோம்....

கிஷோர் விவரிக்க பதிலுக்கு உதயசந்திரன் பலமாய் தலையாட்டியபடி, ஆமாம்... ஆமாம்... நானும் பீச்சிற்கு வந்து பத்து பதினைந்து நிமிடங்களாக நீங்கள் காதலர்களாய் பழகுவதை கவனித்துக்கொண்டுதான் இருந்தேன்... என்றான் வாணியை குறும்புசிரிப்புடன் பார்த்தவாறு.

வாணிக்கு திக்கென்றுதான் இருந்தது எதைப் பார்க்கக்கூடாது... பார்த்திருக்கக் கூடாது என்று நினைத்தோமோ அதை இவன் பார்த்து விட்டானோ? இவன் கிஷோர் கைகளைப் பிடித்ததும் இடையை வளைக்க முயன்றதும் அவள் பட்பட்டென தட்டிவிட்டதும்... எல்லாவற்றையும் பார்த்திருப்பானா? முன்பே பீச்சிற்கு வந்து விட்டதாய் வேறு சொல்கிறானே!

அவள் நினைப்பை புரிந்தவன் போல் அடுத்த வார்த்தைகளை வீசினான் அவன்.

"என்ன யோசிக்கிறாய் வாணி? கொஞ்சம் அப்படி இப்படி இருந்தாலும்.... என்ன... கிஷோர்தான் உனக்கு பொருத்தமானவர்... உனக்கு ஏற்ற... மேட்... ஃபார்... ஈச்.. அதர்... ஜோடி!! என முடித்தான்."

அவன் வார்த்தைகளை ஏற்றி இறக்கிச் சொன்னான். மேட் பார் ஈச் அதரில் ஒரு அழுத்தம் கொடுத்தான். வாணிக்கு பெரும் அவமானமாய்த்தான் இருந்தது. தவிப்பில் நெளியத்தான் செய்தாள்.

"கிஷோரோ நிலைமையை புரிந்து கொள்ளாமல், அப்படிச் சொல்லுங்கள் சார் நீங்கள் சொல்வது ரொம்பவும் கரெக்ட் ஆனால் இந்த வாணியால்தான் புரிந்து கொள்ள முடியவில்லை. காதலர்கள் போல்.. இதோ இங்கு இருக்கும் மற்றவர்கள் போல்.... இதோ இங்கு இருக்கும் ஜோடிகள் போல் நாங்கள் நெருக்கமாய் பேசிப் பழக வேண்டும்தானே சார்? அப்படி நடந்து கொண்டால்தானே எதிர்காலத்தில் இருவரும் சிறந்த தம்பதிகளாய் பிரகாசிக்க முடியும்? என வினவ வாணிக்கு தலையில் அடித்துக் கொள்ளாம் போல்தான் இருந்தது.

உதயசந்திரனும் அவளை மேலும் சங்கடப்படுத்த விரும்பாதவன் போல் அதற்கு கிஷோருக்கு பதில் சொல்லாமல் கொண்டிருந்த புன்னகை பெரிதாக்கிக் கொண்டான்.

பின் உதயசந்திரனிடம் விடைபெற்றுக்கொண்டு ஓடாத குறையாய்த்தான் வாணி அங்கிருந்து கிளம்பினாள். அவள் விலகி நடக்கும்போது அவனது பார்வை அவனது அந்த அர்த்தமான புன்னகை எல்லாம் அவளை என்னவோ செய்தது.

பக்கத்தில் சளசளவென பேசி அறுத்துக்கொண்டு வந்த கிஷோரை கொஞ்சமும் சட்டை செய்யாமல் வீடு வந்து சேர்ந்தாள்.

விட்டில் அண்ணி மாலினியும் எரிகிற நெருப்பில் எண்ணை ஊற்றுவது போல், என்ன.... கந்தல் துணி பட்டுக் குஞ்சத்துடன் பீச் பக்கம் எல்லாம் போய் வருகிறதோ? என்றாள் கேலியாய்.

"என்ன அண்ணி சொல்கிறீர்கள்? என்றாள் வாணி புரியாமல்"

"வேறு... என்ன... என் தம்பியைத்தான் சொல்கிறேன்... உன்னுடன் பீச்சுக்கு தொற்றிக்கொண்டானா?"

"அவர் தொற்றவில்லை. நான்தான் கூட்டிப்போனேன்... என்றாள் வாணி உண்மையை மறைக்காமல்."

"எதற்காம்?"

"அடுத்த கேள்வியை சொடுக்கினாள் மன்னி"

"அது.. அது... பேசுவதற்கு... மனம் விட்டு பேசுவதற்கு...."

வாணி முடிக்கவில்லை. மாலினி சிரிக்க ஆரம்பித்துவிட்டாள்.

"என்ன அண்ணி சிரிக்கிறீர்கள்?"

"மனம் என்ற ஒன்று அவனுக்கு இருந்தால்தானே... மனம் விட்டு பேசமுடியும்?"

"நீங்கள் என்னதான் சொல்கிறீர்கள்?"

"நீ... இன்னமும் அவனை நம்புகிறாயே.. வாணிக்கண்ணு... அவன் போடுவதெல்லாம் நடிப்பு... வேஷம்...!"

"வாணியும் ஆற்றாமையாய்ப் பார்த்தாள்"

"அதை நீங்களே சொல்கிறீர்களே... மன்னி?"

"என் தம்பியைப் பற்றி... நான்தானே சொல்லமுடியும்? வேறு யாருக்கு அவனைத்தெரியும்?"

"எதை வைத்து சொல்கிறீர்கள் நீங்கள்? என வாணி வினவ மாலினி பதில் சொல்லாமல் கிஷோரின் நேற்றைய சட்டையை ஒன்று எடுத்துக் காட்டினாள். பார்த்தாயா? இது அவனுடைய சட்டை..! இதன் உள்ளே... பார்... ! மூன்று சிகரெட்டுகள்! தெரிகிறதா? உன்னிடம் அவன் சிகரெட் பழக்கத்தை உனக்காக விட்டுவிட்டதாகச் சொன்னது... பொய்... நடிப்பு.. வேஷம்..! புரிகிறதா?"

மாலினி கேட்க பதில் சொல்ல முடியாமல் வாயடைத்துதான் போனாள் வாணி.



அன்று இரவும் அவளால் நிம்மதியாய் தூங்கமுடியவில்லை. குட்டி போட்ட பூனையாய் அங்குமிங்கும் ரூமில் நடந்தாள் நிறைய சிந்தித்து ஒரு முடிவும் எடுக்கமுடியாமல் தூங்கினாள்.

அடுத்து வந்த மூன்று நாட்களும் அவள் கிஷோருடன் வெளியே சுற்றாமல் ஏன் அவனுடன் ஒரு வார்த்தை கூட பேசாமல் நடந்தாள். அவனது நடவடிக்கைகளை உற்று கவனித்தாள்.

வழக்கம் போல் பணிவும் பதவிசான பேச்சுடனே கிஷோர் வளைய வந்தான், நான்காம் நாள் அவளிடம் வந்து நின்றான்.

"நான் மனம் விட்டு பேச விரும்புகிறேன் வாணி. இன்று மாலை என்னுடன் கல்ச்சுரல் அகாடமி பக்கம் உள்ள பூங்காவிற்கு வருகிறாயா? என்றான்."

வியப்பாய் பார்த்த வாணி மறுகணமே சம்மதமும் சொல்லிவிட்டாள்

கிஷோர் அகன்றான். அவன் முகத்தில் மெல்லிய விஷமச்சிரிப்பொன்று பரவ ஆரம்பித்தது.



# 18

வாணி கொஞ்சமும் யோசிக்கவில்லை. கிஷோர் கல்சுரல் அகாடமி பக்கம் உள்ள பூங்கா சென்று பேசுவோம் என்றதும் கிளம்பிவிட்டாள்.

அண்ணியிடம் கூட விஷயத்தைச் சொல்லாமல் அலுவலகம் முடிந்து வந்தவள் அப்படியே கிளம்பினாள். கிஷோர் நீட்டான ஷர்ட்பேண்ட்டில் டிப்டாப் ஆசாமி போல் நின்று கொண்டிருந்தவன் அவள் வந்ததும் ஆட்டோ ஒன்று பிடித்தான்.

இருவரும் ஏறிக்கொண்டார்கள்.

"கிஷோர் என்ன... நினைத்தானோ... ஆரம்பம் முதலே உதயசந்திரன் பேச்சைத்தான் எடுத்தான். வாணி.. அந்த உன் அலுவலக மேனஜர்... பெயர் என்ன.,. உதயசந்திரனா...? அவர் ரொம்ப நல்ல டைப்பாக அல்லவா தெரிகிறார்? நமக்கு அன்று டக்கென சினிமா டிக்கெட்டுகளை கொடுத்து விட்டாரே? நம் இருவரும் திருமணத்தில் இணைவதை சந்தோஷமாய் வாழ்த்தி வரவேற்றாரே...?"

கிஷோர் பாட்டுக்கு பேசிக்கொண்டு. போக... சட்டென அவனது பேச்சின் மூலம் உதயசந்திரனின் நினைப்பு எழுந்து... அவளை பெரிதும் பாதித்தது.

ஐயோ! இந்த கிஷோர் சொல்வது போல் உதயசந்திரனுக்குத்தான் எவ்வளவு நல்ல மனம்! அவள் முகத்திலடித்தாற் போல் நிராகரித்தும் அவன்

மீது கொஞ்சமும் வெறுப்பு காட்டாமல் நண்பனாய் இருந்து விட்டுப் போகிறேன்.. என முகம் மலரச் சொன்னானே?

இந்த நண்பன் அவள் சம்மதம் சொல்லியிருந்தால் துணைவனாக அல்லவா இருந்திக்கக்கூடும் என்ற நினைப்பு அவனாள் எழுந்து ஓடியபோது இழக்கக்கூடாத எதையோ இழந்துவிட்ட தவிப்பு உண்டாயிற்று.

அதிலும் கிஷோரையும் அவளையும் அவன் முகம் மலர பாராட்டி வாழ்த்து வேறு சொன்னது அவளை ரொம்ப நெருடத்தான் செய்தது. அவனது கம்பீரமான தோற்றமும் கனிவான பார்வையும் திடமாய் யோசித்து செயல்படும் திறமையும் முன் கிஷோரின் பிம்பம் கொஞ்சமும் எடுபடாமல் மங்குவதை உணர்ந்தாள். கூட்டிக் கழித்துப் பார்த்தால் உதயசந்திரனின் பர்ஸனாலிட்டி முன் கிஷோர் ஒரு போக்கிரியாய் பொறுக்கி போலவே தெரிந்தான்.

தன்னையே ஓங்கிக்குட்டிக் கொள்ளலாம்போல் அவளுக்கு இருந்தது. எதைவைத்து இப்படி முடிவு செய்தாள்? எந்த காரணத்திற்காக முட்டாள்தனமாய் இப்படி கிஷோரை தேர்வுசெய்தாள்?

அவ்வளவு மதியிழந்து, மதிகெட்டு யோசிக்காமல்தான் இப்படி ஒரு முடிவு எடுத்திருக்கிறாளா? எவ்வளவு பெரிய தவறு? என்ன ஒரு மடத்தனம்!

தன்னைத்தானே நொந்து கொண்டு யோசித்தவள் மீண்டும் மனதுள்ளே அரற்றினாள் என்ன நினைத்து என்ன தெளிந்து இப்போது என்ன பிரயோஜனம்? எல்லாம்தான் முடிந்து போயிற்றே!

அவளது வாயாலே உதயசந்திரனிடம் கிஷோரை வாழ்க்கைத் துணையாய் ஆக்கப் போவதாக வேறு சொல்லித் தொலைத்திருக்கிறாளே? அதனால் இனி அவள் மனம் மாறினாலும் அவள் உதயசந்திரனை நினைத்தாலும் அது ஒரு போரும் நிறைவேறாத விருப்பம் என்பதும் சேர்ந்தே புரிந்தது. இன்னொருவனை மணக்கப்போவதாக அறிவித்த அவளை எப்படி அவன் ஏற்பான்? ஒரு போதும் மாட்டான்! இனி அவன் வாழ்நாள் முழுவதும் அவளுக்கு வெறும் நண்பன் மட்டுமே!

நினைக்கும் போதே நெஞ்சு கறிப்பது போல் எரிச்சலும் வேதனையுமாக உணர்ந்தாள் அவள்.

கூடவே, இனி உதயசந்திரனை நினைப்பது இனி அவன் அன்பைப் பெறுவது எட்டாக்கனிக்காக இயலாததாக இருக்கலாம். ஆனால் அதற்காக கிஷோரை இனி மணந்து கொள்வதும்.. அவளால் முடியாத காரியம் தானே? தெளிந்து மனதில் புத்தி வந்து விட்ட பிறகு எப்படி அவளால் இந்த முட்டாள் தனத்திற்கு சம்மதிக்க முடியும்?

யோசித்தவள், இதை எப்படி நிறுத்துவது கிஷோருக்கு எப்படி புரிய வைப்பது என சிந்திக்க ஆரம்பித்தாள். இப்போது பூங்காவில் கிஷோருடன்



பேசும்போது அவனுக்கு தெளிவாய் உணர்த்தி நம்மநிலையை புரிய வைத்து விட்டால் என்ன? எனவும் நினைத்தாள்.

அவள் நினைத்து முடிக்கவும் அரைமணி நேர பயணம் முடிந்தது ஆட்டோவும் நின்றிருந்தது. கல்சுரல் அகாடமி பக்கம் உள்ள ஆள் அரவமில்லாத பூங்கா அது! கதவைத் திறந்து இருவரும் இறங்கினார்கள். பேசுவதற்காக இந்த ஆள் அரவமில்லாத இடத்திற்கு கிஷோர் ஏன் தன்னை கூட்டிவரவேண்டும்? என்ற பயமும் அவளும் முதல் முறையாய் எழுந்தது.

கிஷோர் விறுவிறுவென முன்னால் நடந்தபடி அவளை பூங்காவினுள் கூட்டிப்போனான். ஊரின் ஒதுக்குப்புறமாய் இருந்ததாலோ என்னவோ பூங்காவினுள் கூட்டம் இல்லை. தூரத்தில் ஒன்றிரண்டு பிச்சைக்காரர்கள் தெரிந்ததோடு சரி.

கிஷோர் நடந்த மரநிழல் ஓரமான ஒரு பெஞ்சை தேர்வை செய்து உட்கார்ந்தான். அவளையும் உட்காரச் சொன்னான்.

"வாணி என்ன நினைத்தாளோ.... விஷயத்தை தாமதிக்காமல் அவனிடம் சொல்லிவிடவேண்டும் என்ற பரபரப்பே அவளுள் எழுந்தது."

"அதனாலே, கிஷோர், ஒரு முக்கியமான விஷயம்... என எடுத்த எடுப்பில் ஆரம்பித்துவிட்டாள்."

"சொல் வாணி.... என்றான் கிஷோர் புதிரான பார்வையுடன்."

"நாம்.. நாம்.. முன்பு பேசியது... நம்... வாழ்க்கைத்துணை... கல்யாண விஷயம் எல்லாவற்றையும் இன்னும் கொஞ்சம் மாதங்கள் தள்ளிப் போடலாம் என நினைக்கிறேன்..."

"அவள் தட்டுத்தட தடுமாறி சொல்ல கிஷோரின் முகம் மெல்ல இறுக ஆரம்பித்தது."

"என்னாயிற்று... என்ன சொல்கிறாய்? என்றான் கோபமாய்."

"அது... அது.. இன்னும் கொஞ்சம் யோசிக்க வேண்டி இருக்கிறது. யோசிப்போம்... என்ன... என்ன... சரிதானே கிஷோர்?"

"அவள் கேட்டு விட்டு ஆவலாய் கேட்க கிஷோர் தன் கையை மடக்கி மறுகையினுள் ஓங்கி குத்தினான். நான் நினைத்தது சரிதான்! என்றான் பற்களைக்கடித்தவாறு"

"என்ன நினைத்தாய் கிஷோர்?"

"நீ மனம் மாறிவிட்டாய் வாணி. இனி நீ ஒருபோதும் என்னை மணக்க சம்மதிக்கப்போவதில்லை. அதனால் நானும் மனம்மாறிவிட்டேன். வேறு ஒரு முடிவு எடுத்துவிட்டேன்...

"வேறு ஒரு முடிவா?"

கிஷோர் அஷ்ட கோணலாய் சிரித்தான். ஆம்... வாணி. எனக்கு கிடைக்காத பொருள் வேறு யாருக்கும் கிடைக்க கூடாது. அதனால் உன்னை விலைபேசிவிட்டேன். வடநாட்டு சேட், ஒருவனிடம் விற்க பேரம் பேசிவிட்டேன்... பார்க்கிறாயா? என்றபடி கைகளை வேகமாய் தட்டி சமிக்ஞை கொடுத்டதான்.

எதிரே... இருந்த பெரிய ஆலமல மறைவில் இருந்து நெட்டையாய் நிடகாத்திர உருவத்துடன் அந்த வடநாட்டு ஆசாமி, கையில் பண சூட்கேஸுடன்! அவன் அவர்களை நோக்கி வர ஆரம்பித்தான்.

அப்படியே நடுநடுங்கிப் போனாள் வாணி.



# 19

வாணி கண்விழித்தபோது சூழ்நிலையே மாறியிருந்தது. பொலபொலவென விடிந்திருக்க... கட்டிலில் அவள்... பக்கத்தில் கைகளைக் கட்டியபடி உதயசந்திரன். மென்மைப் பார்வையையும் வசீகரப் புன்னகையையும் அவளை நோக்கி வீசியபடி.

"என்ன நடந்தது?"

"தலையைப் பிடித்தபடி மயக்க நிலைக்கு தான் போனதற்கு முன்னால் நடந்தவைகளை நிைைவத்துப்பார்க்க ஒவ்வொன்றாய் நினைவுக்கு வந்து மனதில் குமிழியிட்டது."

"கிஷோர் அந்த தனியிடத்திற்கு பேச அழைப்பது போல் கூட்டி வந்தது அங்கு சேட் ஆசாமி ஒருவனிடம் அவளை விலை பேசியது.. தப்பிக்க முயன்ற அவளை அறைந்து மிரட்டியது... ஐயோ... என்ன இது? என அவள்தவிக்கும் போதே மின்னலாய் உதயசந்திரனின் கார் வந்தது.. அதில் புலியாய் அவன் இறங்கி அவர்களை அடித்து துரத்தியது அவளைக் காப்பாற்றியது... நடந்த அதிர்ச்சியில் அவள் மயங்கியது..."

"எல்லாம் நினைவுக்கு வர திடுக்கிட்டவளாகவே உதயசந்திரனை பார்த்தாள்."

"அவர்கள்... அந்த மோசக்காரர்ரகள் எங்கே... எங்கே...? என்றாள் பதற்றமாய்."

மேலும் விரிய வைத்த புன்னகையுடன் அவள் பக்கத்தில் வந்து உட்கார்ந்து தலையை இதமாய் வருடி விட்டான் உதயசந்திரன்.

"பதற்றம் இனி தேவையில்லை கண்மணி எல்லாம் நல்லபடியாகத்தான் நடந்து இருக்கிறது. நான் உடனே போலிஸுக்கு தகவல் கொடுத்து விட்டதால் அவர்கள் இப்போத சிறையில் கம்பி எண்ணுகிறார்கள்..."



"நல்ல காரியம் செய்தீர்கள் உதயசந்திரன் இப்போதுதான் நிம்மதியாக இருக்கிறது. ஆனாலும் நான்... ரொம்பவும் மோசம்தான்... போயும்.. போயும் அந்தக் கிஷோரை நல்லவனாக நினைத்திருக்கிறேனே... சே...! சரியான மடைச்சி தான்... நான்..!'

"தன்னைத்தானே நொந்தவளாயன் தலையில் குட்டிக்கொண்டாள் வாணி."

"சிரித்தபடி அவள் தலையை தாங்கிப்பிடித்து மறுபடியும் வருடி விட்டவன், விடு கண்மணி. அதுவெல்லாம் நடந்து முடிந்த கதை. மறக்க வேண்டிய கதை. என்றான்."

"ஆனாலும் வாணியின் ஆற்றாமை குறையவில்லை."

"எப்படி எப்படி சந்திரன் முடியும்? போயும் போயும் அந்த கிஷோரை காத□ப்பதாய் ... வாழ்க்கைத் துணையாய் வேறு நினைத்துப் பார்த்திருக்கிறேனே...!'

அது... நிச்சயமாய் காதல் அல்ல.. வாணி.. என்றான். உதயசந்திரன் திடமான குர□ல்.

அவளுக்கு பெரும் ஆச்சரியம்! தன்னை விட தன் மனதை இவன் தெளிவாய் உணர்ந்திருக்கிறானோ என்ற வியப்பு!

நிஜமாகவா சொல்கிறீர்கள்? என்றாள் ஆவல் தாங்காமல்

இம்முறை அவள் படபடப்பை குறைக்க குனிந்து மென்மையாய் அவள் நெற்றியில் முத்தமிடட்டான் அவன்

சி□ர்து வெட்கியவளின் முகத்தை நிமிர்த்தி, வாணி, உன்னுடைய பிரச்சினையே உன்னுடைய அன்புச் சூழல்தான். அழகான

அடுத்த **அக்ஷயா** மாத நாவ–லீ

**அகிலாகோவிந்த்** எழுதும்

**"விழியோரப்**
**புன்னகை.!"**

**சுவையான நாவல்..! படிக்க தவறாதீர்கள்..!**

... குடும்பச் சூழல் உனக்கு இயற்கையிலே அமைந்து விட்டது. அந்த அன்பிற்கு சிகரம் போல் பாசமான அண்ணி வேறு. வந்து சேர... கூட்டை விட்டு பிரியவோ வெளியே வரவோ மறுக்கும் பறவைக்குஞ்சு போல நீயாகி விட்டாய். உன்னை நீயே ஒரு பாசச்சிறைக்குள் அடைத்து விட்டாய். அந்த பாசமயக்கத்தில்தான் குரங்கு போல் உன்னைகவர வந்த கிஷோரைக் கூட அழகான கிளியென்று நினைத்து விட்டாய். என்ன நான் சொல்வது சரிதானே?"

"அவன் விளக்கி உரைத்தபடி அவள் கரங்களை ஆறுதலாய் பற்றி அழுத்தினான்."

அவளது அழகான தலை அதை ஆமோதிப்பது போல் கிடுகிடுவென ஆடியது. நீங்கள் சொல்வது. சரியென்றுதான் தோன்றுகிறது சந்திரன். அதனாலே தான் ண்மையான காதல் முத□லே உங்கள் மீது இருந்தும் குடும்பச் சூழலை பிரிய முடியாத குஞ்சாய் என்னை நானே வருத்திக்கொண்டு உங்களைத் தவிர்த்தேன். அது... அது... எவ்வளவு பாமரத்தனமான... அது. என்ன சொல்வார்கள் ஒருவித வளர்ச்சி... மெச்சூரிட்டி இல்லை என்று? அது இல்லாதது எனது முட்டாள் தனத்தை அல்லவா காட்டுகிறது? என்னைப் போலவே இனி ஒவ்வொரு பெண்ணும் சொல்□க் கொண்டிருந்தால் பாதி பேர் இந்த உலகில் கன்னிகயா அல்லவா வாழ்க்கையை கழிக்க வேண்டிவரும்?

"தன்னைத்தானே நொந்து கொண்டு நிஜமான அக்கறையில் அவள் கேட்ட கடகடவென சிரிக்க ஆரம்பித்தான் உதயசந்திரன்"

"என்ன சிரிக்கிறீர்கள் சந்திரன்? நான் உண்மையாகச் சொல்கிறேன்.."

தான் சொன்னதை அவன் நம்பவில்லையோ என்று அவள் பயந்து போக.. அவள் கழுத்தை மாலை போல் வளைத்துப் பிடித்தான் அவன் நான் அதை மறுக்கவில்லையே கண்மணி. நீ சொன்னது உண்மை. நீ. சொல்லாத உண்மை ஒன்றும் சொல்லட்டுமா? என்றான் புதிராய்

"சொல்லத உண்மையா? கேட்ட அவளின் விழிகள் நிஜமாகவே ஆச்சரியத்தில் விரிந்த."

அதை ஆசையாயப் பார்த்து ரஸித்தவன் கரங்களால் அவளது நெற்றிக் கூந்தலை மென்மையாய் விலக்கி, இன்னமும் உனக்கு புரியவில்லை? என்று வினவினான்.

புரியவில்லை... என்றாள் அவள் அப்பாவியாக.

நீ.. அதாவது உன் மனது.. ஆரம்பம் முதல் காதல் கொண்டிருந்தது என் மீதான் என்கிற உண்மை. அது உன்னை விட எனகது மட்டும்... நான் மட்டுமே நன்கு அறிந்திருந்தேன்...

"அவள் புருவம் உயர்த்தி மேலும் வியந்தாள்."






**தேவையான பொருட்கள்:** கம்பு, கேழ்வரகு, சோளம், எள், பொட்டுக்கடலை, புட்டரிசி.. எல்லாம் சேர்த்து வறுத்து அரைத்த மாவு – கால் கப், துருவின வெல்லம் – அரை கப், பால் – 2 கப், ஏலக்காய்த் தூள் – கால் டீஸ்பூன், நெய் – 1 டேபிள் ஸ்பூன்.

**செய்முறை:** ஒரு கப் தண்ணீருடன் நெய் சேர்த்து அடுப்பில் வைக்கவும். கொதிக்கும்போது, மாவைக் கொட்டிக் கிளறவும். மாவு வெந்ததும் அடுப்பை அணைக்கவும். வெந்த மாவை ஆற விட்டுப் பாலில் நன்கு கரைத்து அடுப்பில் வைக்கவும். துருவிய வெல்லம், பால், ஏலக்காய்த் தூள் சேர்த்து கொதிக்கும்போது அடுப்பை அணைக்கவும்.

**குறிப்பு:** மிக சுலபமாக செய்யக்கூடிய சத்தும் சுவையும் நிறைந்த பாயசம் இது.

"என்ன சொல்கிறீர்கள்?"

"நீ என் காதல் கோரிக்கையை முதலில் நிராகரித்தாலும்... எதை உடனே செய்யவில்லையே...? ஒரு மாத காலம் நான் ரோமியோ போல் விரட்டி காதல் வசனம் பேசி தொல்லை கொடுத்த போதும் உடனே பட்டென முகத்தில் அடித்தாற்போல் சொல்லிவில்லையே? அதற்கு முடிவெடுக்க முடியாதவள் போல்தானே பதுங்கி மருண்ட மான் விழியானாய் என்னிடமிருந்து ஓடினாய். அதிலிருந்தே நான் தெள்ளத்தெளிவாய்




**தேவையான பொருட்கள்:** பால் – 1 லிட்டர், பச்சரிசி – 1 குழிக் கரண்டி, சர்க்கரை – அரை கப்.

**செய்முறை:** பச்சரிசியை ஊற வைத்து மையாக அரைக்கவும். குழித் தட்டு ஒன்றில் கால் அங்குல கனத்துக்கு மாவை ஊற்றி, ஆவியில் 10 நிமிடங்கள் வேக வைக்கவும். இதை சிறு துண்டுகளாக்கவும்.

அடி கனமான வாணலியில், துண்டுகளாக்கிய அடையை ஒரு கப் தண்ணீர் சேர்த்து கொதிக்க விடவும். பாலை சிறிது சிறிதாக சேர்த்து கொதிக்க விடவும். வெந்ததும் சர்க்கரை சேர்த்து 2 நிமிடங்கள் கொதித்ததும் அடுப்பை அணைக்கவும்.

**குறிப்பு:** இது கேரளா ஸ்பெஷல் பாயசம். பாலுக்குப் பதில் தேங்காய்ப் பால் சேர்த்தும் செய்யலாம். அடைகளை தயார் செய்து, வெய்யிலில் காய வைத்து எடுத்து, தேவையானபோது உபயோகிக்கலாம்.

**குறிப்பு:** கேரளாவில் மிகப் பிரபலமான அயிட்டம் இது!

கணித்துவிட்டேன். உனக்கும் என் மீது ஈடுபாடு காதல் இருக்கிறது என்று என்ன.. நான் சொல்வது உண்மைதானே?"

"அவள் கேட்க... அதே கோணத்தில் சிந்தித்துப் பார்த்தவள் உண்மையை உணர்ந்து சிவந்த முகமாய் குனிந்தாள்."

"அவன் விடவில்லை. அவள் மலர் முகம் நிமிர்த்தி ஆசையாய் அந்த மைவிழிகளைப் பார்த்தாள். எனக்கு பதில் வேண்டும் கண்மணி. உனது செந்நிற செவ்விதழ்களை அசைத்து நீ அந்த உண்மையை உரைக்க வேண்டும். என் காதில் தேன் பாய வேண்டும்... புரிகிறதா? என்றபடி அவன் தலையைப் திருப்பி காதுகளை அவள் பக்கம் வைத்துக்சொண்டான்."

"ஜிலிரென மனதிலும் உடம்பிலும் ஒருவித உணர்வு பரவ குங்குமமாய்ச் சிவந்த முகத்துடன் குனிந்தவள் தனது செவ்விதழ்களை அழுத்தமாய் அவனது கன்னங்களில் பதித்தாள். இனி உங்களுக்குப் புரிந்து விடும்... என்றாள் மென்மைக் குரலில்."



...அந்த முத்த ஸ்பரிசத்தில் உண்மையிலேயே உதயசந்திரனும் சிலிர்த்துதான் போனான். "ஆ...ஹா...! என்ன அருமையான பதில். உண்மையிலே எனக்கு எல்லாம புரிந்து விட்டது... என்றான். உற்சாகமாய். கூடவே, கண்மணி, இன்னொரு தித்திப்பான விஷயமொன்றும் உனக்கு வைத்திருக்கிறேன்... சொல்லட்டுமா? என்றான் பிடிகையாய்.

மருண்ட மான் விழிகளை மறுபடியும் விரித்துப் பார்த்தவள், 'என்ன அது?' என்றாள் ஆசையாய்.

'உனது கனவு... அந்த அன்புச் சூழல்... ஆசை ஆசையாய் அந்த தூக்கணாங்குருவி வீடு போல் நீ போற்றிப் பாதுகாக்கும் வீட்டுச் சூழ்நிலை.. அது... நீ என்னை கைப்பிடித்தாலும் உனக்கு தொடர்ந்து கிடைக்கும். அந்த அன்புச் சூழலுக்கு எந்த பாதிப்பும் வராது...! என்றான்..

அவளுக்கு இன்பமான திகைப்புதான்! நம்ப முடியாமல், 'எப்படி... எப்படி?' என்றாள். அவன் விவரித்தான். "வாணி, எனது வீடான அந்த பெரிய பங்களாவில் நானும் என் தாயாரும் மட்டும்தானே வசிக்கிறோம்? அதிலும் அம்மாவுக்கு நான் வெளியே சென்றுவிட்டால்... பாதி நேரம் சுவரையேதான் பார்த்துக் கொண்டிருக்கவேண்டும்... என சலிப்படைவார்கள். அதான் பார்த்தேன். யோசித்தேன். உனக்குத் தெரியாமல் உன் வீட்டாருடன் முக்கியமாக உன் அண்ணியிடம் பேசி என் விருப்பத்தைச் சொன்னேன்... அவர்களும் உன் வீட்டாரோடு கலந்து பேசி எல்லோருக்கும் பரிபூர்ண சம்மதம் என்று சொல்லிவிட்டார்கள் அதனால மாட்டுப்பெண்ணான உன்னை... புகுந்தவீட்டிற்கு... உனது பிறந்த வீட்டோடு... அப்படியே அலாக்காக தூக்கிப்போகப் போறேன். அதாவது உன் அம்மமா அண்ணன் அண்ணி என எல்லோரும் இனி வசிக்கப்போவது நம்முடன்தான்... நம்முடையே பங்களாவில்தான். என்ன கண்மணிக்கு சந்தோஷம்தானே?"

அவன் தனது நீண்ட உரையை முடித்து விட்டுப் பார்க்க வாணிக்கு உல்மையாகவே சந்தோஷத்தில் தலைகால் புரியவில்லை.

"நிஜமாகவே.... நிஜமாகவா...?" என நம்பமுடியாமல் வியந்து சிலிர்த்தவளை தனது கரங்களால் மெல்ல இறுக்கி தனது நெஞ்சில் சாய்த்து அமைதிப்படுத்தினான் அவன்.

ஆனாலும் அவளால் சும்மா இருக்கமுடியவில்லை. ஆற்றாமையாய் அடக்க முடியாமல்தான் அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

"எங்கே... என்னைப் பார்த்து நிஜமாய்ச் சொல்லுங்கள்... உங்களை முதலில் நிராகரித்தும்... அந்தக் கிஷோர் பின்வால் சுற்றியும்... இவ்வளவு நடந்தும் என்னை வெறுக்காமல் உங்களுக்கு என் மீது ஆசை இருக்கிறதா? என்னைப் பிடித்திருக்கிறதா?"

அவள் குரல் நடுங்கவே கேட்டாள். அவன் வசீகரச் சிரிப்புடன் பலமாய் தலையாட்டினான்.

"எப்படி.... எப்படி....?" என்றாள் ஆர்வம் தாங்காமல்

"அதுதான்... காதல்..." என்றான் அவன் அமைதியாய்.

"அவ்வளவு காதலா...?" என அவள் நம்பமுடியாமல் மைவிழிகளை விரித்துக் கேட்க, அந்த விழி அழகையே ஆசையாய் உற்றுப் பார்த்தவன், "இந்த மலர்விழிப் பார்வையில் நான் மயங்கி... அப்படியே விழுந்து..." என ஆரம்பித்து அத்தோடு நிறுத்தினான்.

பின் குறும்புச் சிரிப்புடன், "அதையெல்லாம் வெறும் வார்த்தைகளால் சொல்ல முடியாது. செயலால்தான் புரியவைக்கமுடியும் புரிய வைக்கட்டுமா?" என்றபடி வேகமாய் அவளை தன்னோடு இழுத்து இறுக்கமாய் ஐக்கியப்படுத்தினான்.

வேகமான ஸ்பரிசமும், இதழ்களில் குளிர்வாய் படர்ந்த ஈரமும் அவளுக்கு அவனது அன்பை புரிய வைத்தது. குங்குமமாய்ச் சிவந்த முகத்துடன் அவனது நெஞ்சினில் பதிந்தவள் அப்படியே கிறக்கத்துடன் தனது மைவிழிகளை மூடிக்கொண்டாள். இனிமைக் கனவுகளில் சஞ்சரிக்க ஆரம்பித்தனர் இருவரும்.

(முற்றும்)

**அக்ஷயா மாத நாவல்**

மலர் : 1 இதழ் : 4

வெளியிடுபவர் - ஆசிரியர் :

**எம்.எஸ்.முருகன்**

அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி.நகர், நந்தனம், சென்னை-35.

போன். 044-24361734

கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

**Akshaya Novel Monthly**

Owner, Publisher & Editor **M.S. Murugan,**

Published at :

New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar,

Nandanam, Chennai - 600 035.



33